# ராஜேஷ்குமாரின்
# பகல் நேர பாதகங்கள்

## 1

டெலிபோன் நடுக்கமாய் கிணுகிணுத்தது.

கண்ணாடி டம்ளரில் நிரம்பியிருந்த பாதாம் கீரை செல்லமாய் உறிஞ்சிக் கொண்டிருந்த வல்லப் ரிஸீவரை எடுத்தான். இளைஞன். முப்பது வயது.

"ஹலோ..."

"மிஸ்டர் வல்லப்..."

"எஸ்..."

"நான் அந்தோணி... ஜெம் நைலோ இண்ட்ஸ்ட்ரீஸின் ஃபாக்டரி மானேஜர்."

"ஓ... நீங்களா...? நேத்திக்கு சாயந்திரம் நீங்க என்னைக் கேட்டு போன் பண்ணினதா... என்னோட பி.ஏ. சொன்னார்..."

"எஸ்... உங்க கம்பெனிக்கு ஒரு பல்க் ஆர்டர் குடுத்து வித்தின் ஃபிப்டீன் டேஸில் மெட்டீரியல்ஸ் வாங்கணும்..."

"ஆர்டர் விவரம் என்னான்னு சொல்ல முடியுமா...?"

"ஸாண்ட்விச் பெல்ட் டயா ஃபைவ் ஹஸ்ட் ரெண்ட் எம்.எம். இருநூறு மீட்டர் வேணும்... அதே மாதிரி நைலோ நீட்டா பெல்ட் ஆயிரம் மீட்டர் வேணும்."

"மை குட்னஸ்..."

"என்ன அசந்துட்டீங்களா...?"

"பின்னே இட்ஸ் ஒர்த் அபௌட் டென் லேக்ஸ் ஆச்சே... மலைக்காமே இருக்க முடியுமா...?"

"மெட்டீரியல்லை நீங்க தரு பேங்க் அனுப்ப லாம். உடனடியா நாங்க கேஷைக் கட்டி கூட்டலை கலெக்ட் பண்ணிக்குவோம்..."

"உங்ககிட்டே இதைப்பத்தி டீடெய்லா பேசணும்... நீங்க இப்ப எங்கே தங்கி யிருக்கீங்க...?"

மௌபரீஸ் ரோட்டில் இருக்கிற 'யாத்ரா' ஹோட்டல்.

"ரூம் நெம்பர்...?"

"த்ரீ... நாட்... டூ..."

"நீங்க எப்ப ஃப்ரீயா இருப்பீங்க?"

"இப்ப கூட ஃப்ரீதான்..."

"வரலாமா...?"

"வித் ப்ளஷர்..."

வல்லப் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி ஏழு. சாய்ந்தர ஏழு.

"ஓ... கே... இன்னும் அரை மணி நேரத்தில்... ஐ.... வில் பி... தேர்."

"ஒரு சின்ன ரெக்வெஸ்ட்..."

"என்ன...?"

"இன்னிக்கு டின்னர் என்கூடத் தான் சாப்பிடணும்..."

"தட்ஸ் நாட் குட்... பத்து லட்ச ரூபாய் ஆர்டரை எங்க கம்பெனிக்காக ப்ளேஸ் பண்ண வந்திருக்கீங்க... ட்ரீட் நாங்க குடுக்கிறதுதான் முறை..."

"நாளைக்கு மத்தியானம் நீங்க லஞ்ச் குடுங்க... இன்னிக்கு என்கூட சோழா ஷெர்டன்ல டின்னர் சாப்பிடறீங்க..."



"ஓ... கே... ஐ அக்ரி வித்... யூ..."

"தாங்க் யூ..."

"இன்னும் அரைமணி நேரத்துல உங்களை வந்து பார்க்கிறேன்..." ரிஸிவரை சாத்திய வல்லப் - இண்டர்காமைத் தொட்டு ரிஸீவரை எடுத்தான். தன் பர்ஸனல் அஸிஸ்டெண்ட்டை கூப்பிட்டான்.

"நாகராஜன்..."

"ஸார்..."

"ஒரு நிமிஷம் என்னோட ரூமுக்கு வந்துட்டு போங்க..." ரிஸீவரை வைத்துவிட்டு - டம்ளரில் இருந்த பாக்கி பாதாம் கீரை குடித்து முடிப்பதற்குள் - நாகராஜன் தன் வழுக்கைத் தலை பளீரிட உள்ளே வந்தார்.

"ஸார்...!"

"ஜெம் இண்ட்ஸ்டீஸ் எஃப் எம்... போன் பண்ணியிருந்தார்..."

"மிஸ்டர் அந்தோணி?"

"ஆமா! ஒரு பல்க் ஆர்டர் வொர்த் அபௌட் டென் லாக்ஸீக்கு ப்ளேஸ் பண்ணப் போறார். நான் போய் பிசினஸை முடிச்சிட்டு வர்றேன்..."

"வேர் ஆர் ஹி புட்அப்... ஸார்?"

"ஹோட்டல் யாத்ரா..."

"ஷேல் ஐ கம் வித் யூ ஸார்?"

"நோ... அந்தோணி ஆர்டரில் கமிஷன் எதிர்பார்க்கலாம்... என்கிட்டே தனியா பேசறதுக்கு அவர் விரும்பலாம்... நான் மட்டும் போய்ட்டு வர்றேன்..."

"எஸ்... ஸார்..."

வல்லப் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தான். கார்ச் சாவியை பொறுக்கிக் கொண்டு - பர்சனல் அஸிஸ்டெண்ட் நாகராஜனோடு பேசிக் கொண்டே ஆபீஸ் போர்டிகோவுக்கு வந்து - நின்றிருந்த கண்டேசாவுக்குள் நுழைந்தான்.

கார் சின்ன செருமலோடு உடம்பை குலுக்கிக் கொண்டு ஆபீஸ் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டியது.

சென்னை இருட்டில் விழுந்திருக்க - கார்ப்பரேஷன் விளக்குகள் இருட்டைத் துடைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தன. ட்ராஃபிக் சிக்னல்களில் சிக்கி பதினைந்து நிமிஷம் கரைந்திருந்த போது - மௌபரீஸ் ரோடு வந்தது. ஹோட்டல் 'யாத்ரா' ஏழு மாடிகளின் பிரம்மாண்ட உயரத்தில் முதுகைக் காட்டிக் கொண்டு நின்றது.

யாத்ரா ஹோட்டல் மற்ற ஹோட்டல்களைக் காட்டிலும் ஒரு வித்தியாசமான சூழலில் அமைந்திருந்தது. ஹோட்டலைச் சுற்றிலும் சிவப்பாய், மஞ்சளாய், பூத்துக் கொட்டும் சரக்கொன்றை, •வாத நாராயணா மரங்கள். மரங்களுக்கு நடுவே இருநூறு மீட்டர் நீளத்திற்கு - கொரியன் புல்வெளியை உருவாக்கி - அதன் ஓரங்களில் அதிக வெளிச்சமில்லாத உருண்டை விளக்குகளை பொருத்தியிருந்தார்கள்.

வல்லபின் கார் அகல காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து - கார் பார்க்கிங்கை நோக்கிப் போயிற்று. அரையிருட்டான வாதநாராயணா மரங்களுக்கு கீழே கார்கள் வரிசையாய் தெரிய - இடைவெளிச் சதுரத்தைத் தேடி காரை நகர்த்தினான் வல்லப்.



ஒரு அம்பாசிடர்க்கும், ஒரு மாருதி ஜிப்ஸி வேனுக்கும் நடுவில் அந்த இடைவெளி கிடைக்க - அதற்குள் தன் காரை நுழைத்து - எஞ்சினை அணைத்தான். சாவியை உருவிக் கொண்டு - காரின் கண்ணாடிகளை ஏற்ற முயன்ற விநாடி -

"ஹலோ மிஸ்டர் வல்லப்..."

குரல் கேட்டு திரும்ப - காரின் ஜன்னலுக்கு வெளியே அந்த இளைஞன் நின்றிருந்தான். இருட்டில் முகம் அவ்வளவாய் பிடிபடவில்லை.

"யார்...?"

"நான் அந்தோணி. ஜெம் இண்டஸ்ட்ரீஸ் ஃபாக்டரி மானேஜர். என்னோட பிஸினஸ் டீல் வெச்சுக்கணும்ங்கிறதுக்காக - உங்க போட்டி கம்பெனி ஜி.எம்.கள் எனக்காக ரிசப்ஷனில் காத்திட்டிருக்காங்க... ஸோ நான் உள்ளே போகாம இங்கேயே உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்... கார்லேயே உட்கார்ந்து பேசி நம்ம பிசினஸை முடிச்சுக்குவோமா...?"

"வித் ப்ளஷர்..."

சொன்ன வல்லப் - முன்பக்கக் கதவைத் திறந்துவிட அந்தோணி ஒரு சின்ன ப்ரீப்கேஸோடு உள்ளே வந்தான்.

"நான் இந்த ஹோட்டல்ல தங்கியிருக்கிறதை எப்படியோ மோப்பம் பிடிச்சுட்டாங்க உங்க ரைவல் கம்பெனீஸ்.."

"யார், யார் ரிசப்ஷன்ல இருக்காங்க...?"

"அழகேந்திரா, ஷீலாதீப், ந்யூ ஏரா..."

"நீங்க இந்த ஹோட்டல்ல தங்கியிருக்கிற விஷயம் அவங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"எங்க கம்பெனியில் சில ஸ்பைஸ் இருக்காங்க மிஸ்டர் வல்லப். நான் ஆர்டர் ப்ளேஸ் பண்றதுக்கு ஊரைவிட்டு புறப்பட்டாலே போதும் - இங்கே இருக்கிற மேனுபாக்சர்ஸிக்கு தகவல் வந்துடும். ஒவ்வொரு தடவையும் இப்படித்தான். இந்தத் தடவை என்னோட மெட்ராஸ் விஸிட்டை ஸீக்ரெட்டா வெச்சிருந்தேன். அப்படியிருந்தும் எப்படியோ... லீக் அவுட் ஆயிடுச்சு... நான் ஃஜஸ்ட் வெளியே போய்ட்டு வர்றதுக்குள்ளே... மூணு பேர் ரிசப்ஷன்ல வந்து காத்திட்டிருக்காங்க..."

வல்லப் கேட்டான்.

"எங்க கம்பெனிக்குத்தான் ஆர்டரை ப்ளேஸ் பண்ணனும்ங்கிறதுக்கு ஏதாவது காரணம் இருக்கா மிஸ்டர் அந்தோணி?"

அந்தோணி சிரித்தான்.

"ஒரு காரணமில்லை. மூணு காரணமிருக்கு."

"என்னென்ன...?"

"ஃபர்ஸ்ட் ரீஸன்... உங்க ஸாண்ட்விச் பெல்ட்ஸ் ட்யூரபிள். எலாங்கேஷன் ஒரு எம்.எம். கூட இல்லை. எந்த டில்லியில் போட்டாலும் பெல்ட் அஞ்சு வருஷத்துக்கு நிச்சயமா உயிரோடு இருக்கும். செகண்ட் ரீஸன் ப்ராட்மப்ட் டெலிவரி. டெக்னிகல் ஏரர்ஸ் ஏற்பட்டா... இம்மீடியட்டா ஃபாக்டரிக்கே வந்து இன்ஸ்டன்ட் ரெக்டிஃபிகேஷன் தர்றீங்க. தேர்ட் ரீஸன்... கணிசமான டிஸ்கவுண்ட் தர்றீங்க. ஈவன் தோ... உங்க ரேட்ஸ் ஹையர் சைட்ல இருந்தாலும்... ப்ராடக்ட் மெட்டீரியல் ஓ... கே... ஸோ... வி ப்ளேஸ் த ஆர்டர் வித் யூ..."



"பிசினஸை கார்க்குள்ளேயே முடிச்சுக்கலாமா...? இல்லை வேற எங்கேயாவது ஒரு ஹோட்டலுக்குப் போயிடலாமா...?"

"வேண்டாம்... இதுதான் ஸேஃப்டி... சுற்றிலும் அரையிருட்டு. கார்க்களைத் தவிர மனித சஞ்சாரமே இல்லை... நிம்மதியா பிசினஸ் பேசிட்டு ஹோட்டல் சோழாவுக்கு டின்னர் போயிடலாம்."

வல்லப் புன்னகைத்தான். "உங்க கம்பெனிக்கு நாங்க எத்தனையோ தடவை - பெல்ட் ஆர்டர்க்காக கொட்டேஷன் குடுத்திருக்கோம். பட் ஆர்டர் எங்களுக்கு வராது. நாங்க ஃபெட் அப் ஆகிவிட்ட சமயத்துல நீங்க வந்திருக்கீங்க. தாங்க் யூ வெரிமச் ஃபார் யுவர் கைண்ட் அப்ரோச்..."

"உங்க தேங்க்ஸ் மட்டும் எனக்கு போதாதே...?"

"வேற என்ன வேணும்...?"

"ஆர்டர் வொர்த்தில் ஃபைவ் பர்செண்ட் கமிஷன் வேணும்."

"குடுத்துடறேன்..."

"இதான் எங்க ஆர்டர் ஃபார்ம்..." - சொன்ன அந்தோணி ப்ரீப் கேஸைத் திறந்து - ஒரு கவரை எடுத்து நீட்டினான்.

"எல்லாவற்றையுமே பிரிப்பேர் பண்ணி கொண்டாந்துட்டீங்களா?"

"எங்க ஜி. எம்மோட ஏற்பாடு இது..."

"உங்க கம்பெனியோட டீலிங்க்ஸ் கிடைச்சது எங்களைப் பொறுத்தவரைக்கும் புண்ணியமான ஒண்ணு..."

"நோ... நோ... பிராடெக்ட் உங்ககிட்ட சுத்தமா இருக்கும்போது - கஸ்டமர்ஸ் தே வந்துதானே ஆகணும்... ப்ளீஸ் ஆர்டரை பாருங்க..."

வல்லப் காருக்குள்ளிருந்த விளக்கை பொருத்திக் கொள்ளுவதற்காக திரும்பி ஸ்விட்ச்சைத் தொட்ட விநாடி -

கழுத்தில் இடியே இறங்கிவிட்ட தினுசில் ஒ அடி.

கத்தக் கூட முடியாமல் -

அப்படியே சரிந்தான் வல்லப்.

அந்தோணி - அவனுடைய கையிலிருந் கவரைப் பறித்து ப்ரீப்கேஸீக்குள் வைத்து கொண்டு - ஒரு கூர்மையான அரையடி நீ ஊசியை கண்ணாடி உறைக்குள்ளிருந்து எடுத் -

வல்லபின் தொண்டைக் குழியில் ஆழமா இறக்கி உருவிக் கொண்டான். ஊசி இறங்கி இடத்தில் - ஒரு துளி ரத்தம் பவளம் மாதி உருண்டு நின்றது.

"வந்தனம் வல்லப்... குட் நைட்..." அந்தோ காரின் கதவைத் திறந்து கொண்டு வெளிே வந்தான். அமைதி.

தொலைவில் ஹோட்டல் - வெளிச்சமாய் கொஞ்சம் ஆரவாரமாய் இருந்தது. கார்களுக் மத்தியில் நிதானமாய் நடந்து - டூ வீலர் பார்க்கிங்கிற்கு வந்து - தன் வெஸ்பாவை உதைத்தான். ஏதோ ஒரு கல்யாண ரிசப்ஷனக் வந்து போகிறவனைப் போல் - விசிலடித்து கொண்டே - ஆக்ஸிலேட்டரை முறுக்கி - பறந்தான்.

ஹோட்டல் யாத்ரா இப்போது - சிவப்பு நியான் எழுத்துக்களில் இருந்தது.

## 2

"என்ன தம்பி... உங்களுக்குப் பொண்ணு பிடிச்சதா...?" ராஜசேகரனின் காதருகே புரோக்கர் கேட்டார்.

"ம்... ம்..."

"ம்... ம்... ன்னா என்ன அர்த்தம்...?"

"பிடிச்சிருக்குன்னு அர்த்தம்..."

"பொண்ணு கறுப்புதான். ஆனா... லட்சணமா இருக்கும்னு சொன்னேன் சரியா...?"

"ம்... சரிதான்..."

பெண்ணின் அப்பா ராகவன் கேட்டார். "பொண்ணை, உள்ளே போகச் சொல்லிடலாமா... புரோக்கரே...?"

"ம்...ம்..."

புரோக்கர் தலையாட்டினார்.

ரோகிணி பட்டுப்புடவை சரசரக்க உள்ளே எழுந்து போனாள்.

"இனி மத்த விஷயங்களைப் பேசிடலாமா...?"

ராகவன் கேட்க புரோக்கர் சிரித்தார். "இனிமே புதுசாபேச என்ன இருக்கு...? எந்தவிதமான சீர் செட்டையும், நகை நட்டையும் எதிர்பார்க்காமே... கவர்ன்மெண்ட் உத்யோகத்தில் இருக்கிற தம்பி- உங்க பொண்ணை கல்யாணம் பண்ணிக்கத்

தலையை ஆட்டிட்டாரு... தம்பியைப் பத்தி நீங்களும் வெளியே விசாரிச்சுப் பார்த்துட்டீங்க... அம்மா, அப்பா சொந்த பந்தம் எதுவும் இல்லைங்கற ஒரே யொரு டிஸ்க்வாலிஃபிகேஷனைத் தவிர-வேற எந்தக் குறையுமே தம்பி ராஜசேகரனுக்கு இல்லை... முகூர்த்தத் தேதியை குறிக்க வேண்டியது; கல்யாண மண்டபம் பார்க்க வேண்டியது. விருந்து வைபவம்ன்னு நடத்தறது எல்லாமே... உங்க வேலைதான்... ஜோஸியரைப் பார்த்து சுபகாரியங்களுக்கு நாள் குறிக்க வேண்டியது தான் அடுத்த நிமிஷ வேலை..."

ரோகிணியின் அம்மாக்காரி சமையலறையின் ஓரத்திலிருந்து எட்டிப்பார்த்து-ராகவனுக்கு ஜாடை செய்ய அவர் எழுந்து போய்-கிசுகிசுப்பாய்க் கேட்டார். "என்ன ராஜம்?"

"உங்க பொண்ணுக்கு... மாப்பிள்ளை பையன் கிட்டே தனியா ஒரு ரெண்டு நிமிஷம் பேசணுமாம்..."

"எதுக்கு...?"

"தெரியலை..."

"டிகிரி படிச்சாலே... இந்த பொண்ணுகளுக்கு தைரியம் வந்துடுது. அவ ஒண்ணும் பேச வேண்டாம்..., வரதட்சணை நகை, நட்டு, சீர் எதுவுமே வேண்டாம்ன்னு வலிய வந்திருக்கிற இந்த மாப்பிள்ளையை-இவ ஏதாவது கேள்வி கேட்டு துரத்தயடிச்சுடப் போறா..."

ரோகிணி மெல்ல பக்கத்தில் வந்து நின்றாள். "அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம்ப்பா... அவர்க்கு கோபம் வர்ற மாதிரி நான் எதுவுமே கேட்க மாட்டேன்..."

"கழுத்துல தாலி விழறதுக்கு முன்னாடி நீ பேசியாகணுமா?"

"ஆமா..."

ராகவன் முறைத்துக் கொண்டே வெளியே வந்தார். ராஜசேகரனைப் பார்த்தும் வலிய புன்னகைத்தார்.

"தப்பா... நினைச்சுக்காதீங்க... எம் பொண்ணு ரோகிணி உங்ககிட்டே ஒரு ரெண்டு நிமிஷம் தனியா பேசணுமாம்..."

"பேசலாமே...?"

எழுந்து கொண்டான் ராஜசேகரன்.

இடது பக்கமாய் இருந்த அவளுடைய அறையைக் காட்டினார் ராகவன். மெதுவாய் நடந்து போய் அறைக்குள் நுழைந்தவன் - ஜன்னலருகே நின்றிருந்த - ரோகிணியைப் பார்த்ததும் புன்னகைத்தான்.

"என்ன பேசணும்...?"

"என்னை உங்களுக்கு பிடிச்சிருக்கா...?"

"பிடிச்சு இரண்டு நாளாச்சு..."

"ரெண்டு நாளாச்சா...?"

"ம்... தரகர் போட்டோவைக் காட்டினப்பவே எனக்குப் பிடிச்சிடுச்சே...!"

"நான் கறுப்பு. அவ்வளவு பர்சனால்டியும் கிடையாது."

"உன்னோட முகம்... எனக்கு அழகாயிருக்கு."

"நீங்க இண்டியா பெட்ரோலியம் கம்பெனியில் தானே வேலை பார்க்கறீங்க...?"

"ஆமா..."

"கெமிக்கல் இன்ஜினியர்...?"

"ஆமா..."

"ஸேலரி எவ்வளவுன்னு தெரிஞ்சுக்கலாமா...?

"கிட்டத்தட்ட நாலாயிரம் ரூபாய்."

"இவ்வளவு ஹெல்த்தியான ஜாப்ல இருக்கிற நீங்க... வரதட்சணை நகை சீர் எதுவுமே வேண்டாம்ன்னு... ஒரு சாதாரண குடும்பப் பொண்ணான என்னை கல்யாணம் பண்ணிக்க எப்படி ஒத்துகிட்டீங்க...?"

"நீ எனக்கு நல்ல மனைவியா இருப்பேங்கிற நம்பிக்கையில் தான்..."

"ஆமா..."

"உங்களுக்கு மனைவியாகப் போகிற நான்... எதையுமே உங்ககிட்டயிருந்து மறைக்கக் கூடாது இல்லையா...?"

"அது உன்னோட இஷ்டம்... நீ மறைக்க விரும்பினா மறைக்கலாம்..."

"அது மறைக்கக் கூடிய விஷயமில்லை..."

"அப்படீன்னா சொல்லு..."

சொன்னாள்.

அவன் நெற்றி திகைப்பில் ஏறியதும்.

## 3

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும் - சப்-இன்ஸ்பெக்டர் அவினாஷும் ஹோட்டல் 'யாத்ரா'வுக்கு வந்து சேர்ந்த போது ராத்திரி பதினோரு மணி. கார் பார்க்கிங்கிற்குப் பக்கத்தில்



ஒரு சின்ன கும்பல் நின்றிருந்தது.

ஃபுல் சூட்டில் அணிந்த அந்த நடுத்தர வயது நபர் வியர்வை மின்னும் முகத்தோடு - நவநீதகிருஷ்ணனை எதிர் கொண்டார்.

"ஸார்...நான் யோகேஷ்... இந்த ஹோட்டலுக்கு மானேஜர்."

"பாடியை நீங்கதான் மொதல்ல பார்த்தீங்களா...?"

"நான் இல்ல... ஸார்... ஒரு வேன்டிரைவர்... ஹியர் ஈஸ்த பர்ஸன்..." பக்கத்தில் காக்கி யூனிபார்மில் நின்றிருந்த ஒரு நபரைக் காட்டினார் மானேஜர் யோகேஷ்.

அவனோடு பேசிக் கொண்டு ஸ்பாட்டை நோக்கிப் போனார் நவநீதகிருஷ்ணன். "உம் பேரென்ன?"

"சுந்தரம் ஸார்."

"எங்கே வேலை பார்க்கறே...?"

"தண்டாயுதபாணி பவுண்டரியில் டிரைவரா இருக்கேன் ஸார்..."

"இந்த ஹோட்டலுக்கு எதுக்காக வந்தே...?"

"பவுண்டரி ஓனர் ஜிப்ஸி வேனை இங்கே விட்டுட்டு... ஃப்ரண்ட்டோ கார்ல ஏறி போயிட்டார்ஸார்... எனக்குப்போன பண்ணி வேனை எடுத்துட்டு போகச் சொன்னார். அதான் ஹோட்டலுக்கு வந்தேன்..."

"எத்தனை மணிக்கு வந்தே...?"

"பத்தரை மணி இருக்கும் ஸார்..."

"பாடி எப்படி உன் பார்வையில் பட்டது...?"

"என்னோட வேன் டிரைவிங் சீட்டுக்கு வரும்

போது - கார்க்குள்ளே எதேச்சையாகத்தா
பார்த்தேன்... ஸார்... ஆள் உட்கார்ந்திருந்
பொஸிஷன் கொஞ்சம் வித்தியாசமாக பட்டது
குடிச்சிட்டு யாராவது படுத்திருக்கலாமோன்னு
உத்துப் பார்த்தேன். நியான் லைட் வெளிச்சத்து
ஏதோ கோடு மாதிரி தெரிஞ்சது. நிலைக்குத்தி
கண்களும் திறந்த வாயும் - எம் மனசுக்கு
விபரீதமா படவே - காம்பௌண்ட் கேட் வாட்
மேன் கிட்டேப் போய் சொன்னேன். வாட்ச்மே
வந்து பார்த்துட்டு - மானேஜர்க்கு தகவ
சொன்னான்."

நவநீத கிருஷ்ணன் காரை நெருங்கியிருந்தா
எமர் ஜென்ஸி விளக்கு ஒன்றை பிடித்தபடி - பேர
ஒருவன் நின்றிருக்க - கார்க்குள் எட்டிப் பார்த்தா
வலது கைக்கு கர்ச்சீப்பை சுற்றிக் கொண்டு
கதவைத் திறந்து - வல்லபின் சட்டை பாக்கெட்டி
இடது கையை நுழைத்து - அங்கே இருந்தவை
அள்ளினார்.

ஒரு மணி பர்ஸ்.

நான்கைந்து துண்டு காகிதங்கள்.

மணிபர்ஸைப் பிரித்தார்.

முன்பக்கக் கண்ணாடி உறைக்குள் - ஒரு
விஸிட்டிங்கார்டு சொருகப்பட்டிருந்தது. உருவி
படித்தார்.

"ஜி. வல்லப் மானேஜிங் டைரக்டர். பெல்
இண்டஸ்ட்ரீஸ், அம்பை நகர் எக்ஸ்டென்ஷன்
தேர்ட் கிராஸ், மெட்ராஸ் நைட்டி ஃபைவ்... போ
நெம்பர் டபுள் சிக்ஸ் ஒன் எய்ட் ஃபோர் ஃபைவ்...

கார்டை பக்கத்தில் நின்றிருந்த அபிநாஷிடம்
கொடுத்தார். "இந்த போன் நெம்பர்ல யார்



இருந்தாலும் உடனே வரச் சொல்லுங்க..."

"எஸ்... ஸார்..."

அவிநாஷ் ஹோட்டல் ரிசப்ஷனை நோக்கிப் போனார். பத்து நிமிஷம் கழித்து திரும்ப வந்தார்.

ஹோட்டல் மானேஜரை விசாரித்துக் கொண்டிருந்த நவநீதகிருஷ்ணன் அவிநாஷை ஏறிட்டார்.

"போன்ல யாரு கிடைச்சாங்க?"

"நாகராஜன்னு ஒருத்தர்... மானேஜிங் டைரக்டர்க்கு பி.ஏ.வாம். உடனே புறப்பட்டு வர்றதா சொன்னார்..."

"வரட்டும்..." நவநீதகிருஷ்ணன் மறுபடியும் ஹோட்டல் மானேஜரிடம் திரும்பினார். "மிஸ்டர் யோகேஷ்! விஸிட்டிங் கார்டுபடி இறந்து கிடக்கிறவர் பேர் வல்லபாக இருக்கலாம். இவர் இந்த ஹோட்டலுக்கு ரெகுலர் கஸ்டமரா?"

"நோ... ஸார்... இன்னிக்குத்தான் இவரை பாக்கிறேன்..."

"கார் பார்க்கிங்கை கவனிச்சுக்க... ஏன் ஒரு வாட்ச்மேனை போடலை. ஒரு ஸ்டார் ஹோட்டல்ல கார் பார்க்கிங்கிறது பொறுப்பான விஷயம் இல்லையா...?"

"யூ...ஆர் கரெக்ட் ஸார்... ஆரம்பத்தில் ஒரு ஆளைப் போட்டோம். அவன் வேலையை விட்டு நின்னதும்... மானேஜ்மெண்ட் வேற ஆளைப் போடலை..."

"காரணம்...?"

"கார்பார்க்கிங் இந்த ஹோட்டலைப் பொறுத் தவரைக்கும் ஒரு பிரச்சனையே இல்லை...

...றைய இருக்கு... வெகிகிள்ஸ் ஓனர்ஸ் தாங்களாவே ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்திகிட்டு - பார்க்கிங்கை மெயின்டஸ் பண்ணிகிட்டாங்க..."

நவநீதகிஷ்ணன் மேலும் சில கேள்விகளை கேட்டு முடிப்பதற்குள் - அந்த டாக்ஸி வேகமாய் வந்து - கும்பலுக்குப் பக்கத்தில் நின்றது. நாகராஜன் பதட்டமாய் இறங்கி - நவநீதகிருஷ்ணனை நோக்கி வந்தார்.

"ஸார்... அயாம் நாகராஜன் பி. ஏ. டூ... மிஸ்டர் வல்லப் மானேஜிங் டைரக்டர் ஆஃப் பெல்ட் இண்டஸ்ட்ரீஸ்..."

நவநீதகிருஷ்ணன் அவரை கார் அருகே கூட்டிப் போய்க் காட்டினார். "இவர் வல்லப் தானா...?"

நாகராஜன் அதிர்ச்சியடைந்து-திக்கித்த பார்வையோடு வல்லபைப் பார்த்துக் கொண்டே 'ஆமாம்' என்கிற மாதிரி தலையாட்டினார். பேச்சு வராமல் திணறினார். "ஸ...ஸார்...ஹி...ஈ...ஸ்..."

"டெட்... மர்டர்ட் பை ஸம்படி..."

"யார்...?"

"யாராயிருக்கும்னு நீங்கதான் சொல்லணும்..."

"ஸ...ஸார்..."

"இந்த ஹோட்டலுக்கு இவர் எதுக்காக வந்தார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும் ஸார்... மிஸ்டர் அந்தோணின்னு ஒருத்தரை பார்க்க ஏழு மணிக்கே ஆபீஸிலிருந்து புறப்பட்டார்."



"அந்தோணி...?"

"ஆமா... ஸார்..."

"வாட் ஈஸ் ஹி...?"

"ஜெம் நைலோ இண்டஸ்ட்ரீஸில் பாக்டரி மானேஜர்... ஏழு மணிக்கு அவர் தான் போன் பண்ணியிருந்தார்..."

"எங்கிருந்து?"

"இதே ஹோட்டலிலிருந்துதான். அவர் இந்த ஹோட்டலில் தான் 'ஸ்டே' பண்ணியிருக்கிறதா சொன்னார்."

நாகராஜன் சொன்னதைக் கேட்டு - யாத்ரா ஹோட்டல் மானேஜர் யோகேஷ் திடுக்கிட்டார்.

"அந்த அந்தோணி இந்த ஹோட்டலில் ஸ்டே பண்ணியிருக்கறதா சொன்னாரா?"

"எஸ்..."

"ரூம் நெம்பர் தெரியுமா...?"

"தெரியாது..."

"ஹி ஈஸ் கம்மிங் ஃப்ரம்...?"

"கோயம்புத்தூர்..."

"ஒரு நிமிஷம்...!" -சொன்ன யோகேஷ் ஹோட்டல் ரிசப்ஷனுக்குப் போய், சில நிமிஷ நேரத்திற்குள் திரும்பினார்.

"அந்தோணிங்கிற பேரில் ரூம்ல யாருமே ஸ்டே பண்ணலை. ஈவன் கோயமுத்தூர் பார்ட்டி கூட யாருமில்லை..."

"ஸோ...ஹி மே பி போகஸ்..."

அவினாஷ் குறுக்கிட்டுக் கேட்டார்.

"அந்த அந்தோணியை நீங்க பார்த்திருக்கீங்களா?"

"இல்லை..."

"ஜெம் இண்டஸ்ட்ரீஸ்ங்கிற பேரில் நிஜமாவே கோயம்புத்தூர்ல ஒரு கன்சர்ன் இருக்கா...?"

"இருக்கு ஸார்..."

"ரெப்யூடட் கன்சனா...?"

"எஸ்..."

"அந்த கம்பெனியோட போன் நெம்பர் வேணுமே..."

"ஆபீஸ் டயரியில் இருக்கு... எடுத்துத் தர்றேன் ஸார்..."

"அந்த அந்தோணி எதுக்காக போன பண்ணினார்ன்னு உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர் நாகராஜன்...?"

"ஒரு பல்க் ஆர்டரை ப்ளேஸ் பண்றதுக்காக..."

"குழப்பமா இருக்கே..."

ஃபாரன்ஸிக் ஆட்கள் தகவலறிந்து - காரில் வந்து இறங்கினார்கள். வல்லபின் உடல் கீழே கடத்தப்பட்டது. எமர்ஜென்ஸி விளக்கு வெளிச்சத்தில் காரின் உட்புறத்தை கழுவினார்கள்.

ஃபாரென்ஸிக் ஆபீஸர் குருராஜன் திடீரென்று முன்சீட்டுக்குக் கீழே குனிந்தார். தன் உதவியாளரைக் கூப்பிட்டார்.

"கபூர்..."

"ஸார்..."

"கிவ் மீ... ஏ... ஸ்டிக்..."

கபூர் ஒரு குச்சியை கொண்டு வந்து கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட குருராஜன் - குச்சியால் டாஷ்போர்டுக்கு கீழே கால் வைக்கும் இடத்தில் - கிடந்த 'அதை' எடுத்தார்.

நவநீதகிருஷ்ணனும், அவிநாஷும் ஆர்வமாய் நெருங்கினார்கள்.

## 4

ராஜசேகரனின் நெற்றி வியப்பில் உயர்ந்தது. உதடுகள் தன்னிச்சையாய் பிரிந்து கேட்டது.

"நிஜமாவா...?"

"எதுக்குமே பொய் சொல்லி எனக்குப் பழக்கமில்லை... நான் ஒரு கிட்னி டோனர். என் உடம்பில இந்த நிமிஷம் ஒரு கிட்னிதான் இருக்கு..."

"கிட்னியை யார்க்கு டொனேட் பண்ணினே...?"

"ஒரு மில் லேபர்க்கு... ஆனா அந்த லேபர்க்கு நான்தான் கிட்னியை தானமா குடுத்தேன்னு தெரியாது... டாக்டர்க்கு மட்டும்தான் தெரியும்."

"உன்னோட அப்பா அம்மாகிட்டே ஏன் சொல்லை...?"

"சொன்னா தாங்கிக்க மாட்டாங்க முக்கியமான அம்மா... நான் யார்க்காவது ப்ளட் டொனேட் பண்ணிட்டு வந்தாலே - அன்னிக்கு பூராவும் அம்மா அழுவா... ஒரு கிட்னியை குடுத்திருக்கேன்னு தெரிஞ்சா அவ்வளவுதான்..."

"இதை என்கிட்டே ஏன் சொன்னே...? மறைச்சிருக்கலாமே...?"

"நான் விரும்பலை..."

"நீ ஒரு கிட்னி டோனர்ன்னு தெரிஞ்[illegible] பின்னாடி - கல்யாணம் பண்ணிக்கிற முடிவி[illegible] ஏதாவது மாறுதல் இருக்கான்னு நீ தெரிஞ்சுக்[illegible] ஆசைப்படற இல்லையா...?"

"ஆமா..."

ராஜசேகரன் புன்னகைத்துத் தோள்களைக் குலுக்கினான்.

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்க எனக்கு டபுள் ஓ...கே!"

"நிஜமாத்தான் சொல்றீங்களா?"

"மனப்பூர்வமா..."

"தாங்க் யூ...! என்னோட ஃபாதர் மதர்கிட்டே இந்த விஷயத்தை..."

"சொல்ல மாட்டேன்..."

"வெளியே போலாமா...? எங்கப்பாவும் அம்மாவும் டென்ஷனோடு காத்துகிட்டிருப்பாங்க..."

அறைக்கு வெளியே வந்தார்கள்.

"தம்பி..." ராகவன் தவிப்பாய் ராஜசேகரனின் முகத்தைப் பார்க்க அவன் சொன்னான்.

முகூர்த்தத் தேதியை இந்த மாசமே வெச்சுகிட்டா எனக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருக்கும்..."

"தம்பி! எம் பொண்ணு ஏதாவது தப்பா பேசியிருந்தா..."

"உங்க பொண்ணு ரோகிணி என்னிக்குமே தப்பா பேசமாட்டா... தப்பா நடக்க மாட்டா... அவ எனக்கு மனைவியா அமைய நான் குடுத்து வெச்சிருக்கணும்..."



# 5

பாரன்ஸிக் ஆபீஸர் குருராஜன் குச்சியால் எடுத்த அந்தப் பொருளை - ஆர்வம் மேலிட பார்த்தார்கள் நவநீதகிருஷ்ணனும், அவிநாஷும்.

அது ஒரு பாண்ட் எய்ட்.

ஒரு விரலில் சுற்றப்பட்டிருந்ததுக்கு - அடையாளமாய் சுருண்டிருந்தது. சின்ன தொப்பி சைஸில் தெரிந்தது.

நவநீதகிருஷ்ணன் அந்த பேண்ட் எய்டைப் பார்த்ததும் தள்ளி நின்றிருந்த நாகராஜனைப். இப்படி வர்றீங்களா...?

"நாகராஜன் ஒரு நிமிஷம் இப்படி வர்றீங்களா...?"

அவர் வேக நடையில் வந்து பக்கத்தில் நின்றார். நவநீதகிருஷ்ணன் கேட்டார். "வல்லப் ஏதாவது காயத்துக்காக விரல்ல பேண்ட் எய்ட் போட்டிருந்தாரா?"

"இ...இல்லையே..."

"யோசிச்சுச் சொல்லுங்க..."

"நோ... இன்ஸ்பெக்டர். சாயந்தரம் ஏழு மணிக்கு அவரைப் பார்க்கும் போதுகூட பேண்ட் எய்ட் அவர் போட்டிருக்கவில்லை."

"ரெண்டு கையையும் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்..."

"ஸோ... இது அந்த மார்டர் கையிலிருந்து கழன்று விழுந்த பேண்ட் எய்டா இருக்கலாம் இல்லையா...?"

"மே...பி...ஸார்..."

பாரன்ஸிக் ஆபீஸர் குருராஜன் சொன்னார்.

"இந்த பேண்ட் எய்ட் கைவிரல்கள்ல சுற்றப் பட்டிருந்தா...? கால் விரல்கள்ல சுற்றப்பட்டிருந்த தான்னு தெரியலை. இதுல இருக்கிற கைரேகை பதிவுகளை வெச்சுத்தான்... அதை கண்டுபிடிக்க முடியும். ஷ்யூர்!"

"ஸார்..."

"இதை ப்ரஸர்வ் பண்ணி வையுங்க..."

"எஸ்...ஸார்..."

"கார்க்குள்ளே பௌடர் ஸ்பிரே பண்ணிடுங்க... ஃபிங்கர் பிரிண்ட்ஸ் இருக்கான்னு பார்த்துடலாம்..."

நவநீதகிருஷ்ணன் நாகராஜனோடு தள்ளி வந்தார்.

"இந்த கேஸ்ல வெளிச்சம் கிடைக்கணும்ன்னா நீங்க உதவுணும்..."

"காத்திருக்கேன் ஸார்..."

"ஒரு நபர் கொலை செய்யப்படணும்ன்னா... என்னென்ன காரணங்கள் இருக்கும்ன்னு நினைக்கறீங்க...?"

"பெண், பணம், முன்விரோதம்..."

"சரியா சொல்லியிருக்கீங்க...! வல்லபக்கு எந்த மோட்டீவ் பொருந்தும்ன்னு நினைக்கறீங்க?"

"எனக்குத் தெரியலை..."

"வல்லபக்கு கல்யாணம்...?"

"இன்னும் இல்லை..."

"பேரண்ட்ஸ்...?"

"அம்மா சின்ன வயசிலேயே இறந்துட்டாங்க...



வல்லப் போட அப்பா கோவிந்தராஜ்... பெரியவர் போன வருஷம் தான் காலமானார்..."

"வல்லப்போடு கூடப் பிறந்தவங்க...?"

"யாருமில்லை..."

"ஒண்டிக்கட்டை?"

"ஆமா..."

"அப்படீன்னா கெட்டுப் போக வாய்ப்புகள் அதிகம்... அவர்க்கு என்னென்ன கெ;டட பழக்கம் இருந்ததுன்னு தெரியுமா...?"

"லிக்கர் சாப்பிடுவார்..."

"லேடீஸ் டச்...?"

"தெரியலை..."

"நாகராஜன்! எதையும் மறைச்சு - பிரயோஜனமில்லை. வல்லப் உயிரோடு எந்திரிச்சு வந்து உங்களைக் கண்டிக்கப் போறதில்லை... இப்போ நமக்கு முன்னாடி உள்ள ஒரே பிரச்னை... அந்த மர்டரரை ட்ரேஸ் பண்றதுதான்... நீங்க தைரியமா எல்லா உண்மைகளையும் சொல்லலாம்..."

"ஸாரி ஸார்! வல்லப்போட பர்சனல் மேட்டர்ஸ் எனக்குத் தெரியாது... அதுல எனக்கு இன்வால்வ்மெண்ட்டும் கிடையாது..."

"ஓ...கே... வல்லப்க்கு நெருங்கின ப்ரண்ட்ஸ் யாரு?"

நாகராஜன் முன் மண்டையைச் சொறிந்தபடி - யோசிக்க சில விநாடிகளை எடுத்துக் கொண்ட பின் - சொன்னார்.

"மதிவாணனும், திவாகரனும்."

"ரெண்டு பேரும் இதே ஊர் தானே...?"

"ஆமா"

"என்ன வேலை...?"

"மதிவாணன் ஒரு ட்ராக்டர் கம்பெனியி[ல்] ஸேல்ஸ் சீஃப் எக்ஸிக்யூட் திவாகரன் ஒ[ரு] ட்ராவல் ஏஜென்ஸிக்கு ப்ரொப்ரைட்டர்..."

"திடீர் ஃப்ரண்ட்ஷிப்பா...?"

"காலேஜ் மேட்ஸ்..."

"அடிக்கடி ஆபீஸ் வருவாங்களா...?"

"ஆபீஸ் வரமாட்டாங்க... பட்... டெலிபோன்[ல்] கான்டாக்டர் பண்ணிக்குவாங்க... சண்[டே] எங்கேயாவது... வெளியே போவாங்க..."

"வல்லப்போட பிஸினஸீக்கு காம்படீட்டா[ர்] உண்டா...?"

"உண்டு ஸார்..."

"அவங்கள்ல யாராவது இந்த காரியத்த[ை] பண்ணியிருக்கலாமா...?"

"எனக்கு எதுவும் சொல்லத் தோணலை ஸார்" சொன்ன நாகராஜனின் கண்கள் அழுகையால் கீறப்பட்டு வெகுவ[ாக] கலங்கியிருந்தன.

## 6

இண்டியா பெட்ரோலியம் கெமிக்கல் கம்பெனியின் டைரக்டர் ஷிண்டே ராஜசேக[ர்] நீட்டிய வெள்ளைத் தாளை வாங்கிக் கொண்[டு] கேட்டார்.

"என்ன... இது...?"

"லீவ் அப்ளிகேஷன் ஸார்."

"ஓ... மேரேஜ் லீவா...? ஹௌ மெனி டேஸ்...?"

"ஒன் வீக் ஸார்."

"போதுமா...?"

"போதும் ஸார்..."

"ஹனிமூன் ட்ரிப் எங்கே...?"

"நாட் யெட் டிசைட்..."

"நான் ஒரு ப்ளேஸை சஜஸ்ட் பண்ணலாமா...?"

"ப்ளீஸ்..."

"பொன்னூத்து ஹில்ஸ் போயிருக்கீங்களா...?"

"போனதில்லை ஸார். பட்... கேள்விப்பட்டிருக்கேன்."

"போய்ப் பாருங்க... குற்றாலமும் ஊட்டியும் கைகோர்த்துகிட்ட மாதிரியான இடம். சுத்தமான ஆக்ஸிஜன் வேணும்ன்னா... அது பொன்னூத்து ஹில்ஸில் தான் கிடைக்கும். அருமையான ட்ரிஸ்லிங்... கனமான கம்பளிகளைத் தேட வேண்டிய அவசியமில்லாத செல்லமான குளிர். பக்கத்துல புதுப்பெண்டாட்டி இருந்துட்டா... பொன்னூத்து ஹில்ஸ் சொர்க்கம்தான்... அதிக செலவு வைக்காத ஹோட்டல்ஸ்..."

"தாங்க்யூ ஃபார் யுவர் சகஷன் ஸார்."

"கல்யாணம் எங்கே... ப்ரியா ஹால் தானே...?"

"ஆமா ஸார்..."

கம்பெனியின் டைரக்டர் ஷிண்டே மறுபடியும் - வாயைத் திறப்பதற்குள் - டெலிபோனின் இண்டர்காம் இணைப்பு மெலிதாய் சிணுங்கியது.

ரிஸீவரை எடுத்தார்.

"எஸ்..."

"ஸார்... நான் சிவராமன்" - மறுமுனையி
க்வாலிடி கண்ட்ரோல் ஆபீஸ் குரல் கொடுத்தா

"சொல்லுங்க... மிஸ்டர் சிவராமன்..."

"ஸார் பிளெண்டிங செக்ஷன்ல ஒ
ப்ராப்ளம்... ரேஷியோவில் வேரியேஷன் வருது.
பர்செண்டேஜ் ஆப் இம்ப்ஜ்யூரி டீஸ் அதிகம
இருக்கு..."

"வர வாய்ப்பில்லையே...?"

"ப்ராடெக் ஃபார்முலாபடிதான் போட்டோம்
ஸார்... அப்படியிருந்தும் இந்த ரிமார்
வந்திருக்கு..."

"சரி... ஸ்பாட்ல இருங்க மிஸ்டர் ராஜசேகரனை
அங்கே அனுப்பி வைக்கிறேன். ஹி வி
ரெக்டிஃபை... த ப்ராப்ளம்..." - ரிஸீவரை வைத்
ஷிண்டே ராஜசேகரனை ஏறிட்டார்.

"ப்ளண்டிங் செக்ஷன்ல ஏதோ ப்ராப்ளம்..
ரேஷியோ வேரியேஷன் - எக்ஸஸ் பர்செண்டே
ஆஃப் இம்ப்யூரிடீஸ்... போ
பார்த்துடறீங்களா...?"

"எஸ்...ஸார்..."

ராஜசேகரன் அறையின்றும் வெளிப்பட்டான்
அதுவரைக்கும் ஏ.ஸி சுகத்தில் இருந்த உடம்பு
வெளி உஷ்ண உறைப்பை சிரமமாய் ஏற்று
கொண்டு ப்ளெண்டிங் செக்ஷனை நோக்க
நடந்தான்.

இடைவேளை நேரம் பாக்டரி காண்டீனி
கும்பல் தெரிந்தது. பக்கோடா வாசனை காற்றி
வந்தது.

ராஜசேகரன் இரண்டு நிமிஷ நேரம் நடந்து



ப்ளெண்டிங் செக்ஷனுக்கு வர - அரைவாசலிலே
சிவராமன் நின்றிருந்தார்.

"என்ன சிவராமன்...?"

"இந்த ப்ளெண்டிங் செக்ஷன்ல போட்ட
நாளிலிருந்து - எனக்கும் இதுக்கும்
ராசியில்லை...தினசரி ஏதாவது ப்ராப்ளம்..."

"ரேஷியோ வேரியேஷன் எப்படி வரும்...?"

"அதான் புரியலை..."

"ப்ளெண்டிங் சார்ட்டை எடுங்க பார்க்கலாம்."

அவர் எடுத்து கொடுக்க - சார்ட்டில்
பார்வையைப் போட்டுத் தாடையைத் தடவினான்
ராஜசேகரன்.

"சரியாத்தானே இருக்கு...! ஆசிட்
ப்ளெண்டிங்ரேஷியோ என்ன...?"

"ஃபைவ் ஈஸ்ட்டு சிக்ஸ்..."

"எக்ஸ்பரிமெண்ட் பாட்டில் எங்கே...?"

"உள்ளே லேப்புக்கு கூட்டிப்போய் - பச்சை
திரவம் அசையும் அந்த பாட்டிலை எடுத்துக்
கொடுத்தார்."

"ஸ்மெல் பண்ணீங்களா...?"

"பண்ணினேன். ஒவர் ப்ளஸண்ட்."

"ப்ளஸண்ட் இருக்கும்ன்னு என் மனசுக்குப்
படலை... மிஸ்டர் சிவராமன் க்ரினிஷ் டீப்பரா
இருக்கு..." சொன்ன ராஜசேகரன் பாட்டிலின்
கார்க்கை பெருவிரல் ஆட்காட்டிவிரல்
சங்கமத்தில் - பிடித்து இழுத்தான்.

கார்க் பிடிவாதம் பிடித்தது.

"என்ன இவ்வளவு இறுக்கமா இருக்கு...?"

"கொண்டாங்க... ஐ...வில்...ட்ரை..."

"நோ...ப்ராப்ளம்...ஐ... கேன்..." ராஜசேகர சொல்லிக் கொண்டே முழுவேகத்தோடு கார்க்கைப் பற்றி இழுக்க-

"ப்ளாச்ச்..."

"கார்க் திடீரென்று இழுபட-

பாட்டிலுக்குள் இருந்த அந்த பச்சைநி அமிலம் - துணித்துளியாய் சிதறி முகத்தை தாக்கியது.

தீக்கங்குகள் பட்டமாதிரியான உணர்வு.

"ஹா...ஆ...ஆ..."

வீறிட்டு - முகத்தைப் பொத்திக் கொண்டு முழங்காலிட்டு துடித்துப் போய் உட்கார்ந்தா ராஜசேகரன்.

"ஸார்!" அதிர்ந்து போய் - சிவராம ராஜசேகரனின் அருகே குனிந்தார்.

# 7

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனும் சப் இன்ஸ்பெக்டர் அபிநாஷும் அந்த அபார் மெண்ட்டுக்கு முன்னால் - ஜீப்பை நிறுத் விட்டு-உள்ளே போனார்கள். லிஃப்ட்டி உபயத்தால் ஐந்தாவது மாடிக்கு உயர்ந்து - அந் பிளாட் கதவுக்கு முன்னால் நின்று - கதவை சப்தித்தார்கள்.

"டொக்...டொக்..."

இடுப்பில் லுங்கியும் வெற்று மார்புமாய் - ஒ இளைஞன் வந்து கதவைத் திறந்தான் தூக்கத்தில் இருந்ததிருக்க வேண்டும். தலை



கலைந்து - கண்கள் சிவந்து-

போலீஸைப் பார்த்ததும் மிரண்டார்கள்.

"ஸ...ஸார்..."

"உம்பேர் மதிவாணனா...?" அவிநாஷ் கேட்டார்.

"இல்ல ஸார்... நான் மதிவாணனோட ஃப்ரெண்ட்..."

"பேரு...?" கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தார்கள்.

"சுதிர்..."

"இது மதிவாணனோட ரூம் தானே...?"

"ஆமா ஸார்..."

"மதிவாணன் எங்கே...?"

"ஊருக்குப் போயிருக்கார்... ஸார்...

"ஊருக்குன்னா...?"

"அவரோட சொந்த ஊருக்கு ஸார்... கும்பகோணத்துக்குப் பக்கத்துல திருப்புறம்பியம்... தான் அவரோட ஊர்..."

"எப்ப போனார்...?"

"மூணு நாளாச்சு..."

"நீயும் மதிவாணனும் மட்டும்தான்... இந்த பிளாட்ல தங்கியிருக்கீங்களா...?"

"ஆமா...ஸார்...ஆறுமாசமாத்தான் அவரோடு நான் இருக்கேன்..."

"உனக்கு என்ன வேலை...?"

"பி அண்ட் ஸி மில்லில் சூபர்வைஸரா இருக்கேன்... வீடு கிடைக்காமே கஷ்டப்பட்டு கிட்டு இருந்தப்ப - மதிவாணன் தான்... தன்

கூடவே தங்கிக்கச் சொன்னார்... 'ரெண்ட்'ல ப
'பே' பண்ணிடறேன்... மதிவாணனை எதுக்
கேக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா ஸார்..

"உனக்கு வல்லபை தெரியுமா...?"

"தெரியும் ஸார். மதிவாணனோ ஃப்ரெண்ட்..."

"வல்லப்கிட்டே பழகியிருக்கீங்களா...?"

"இல்லே... ரெண்டு மூணு தடவை பார்த்
பேசியிருக்கேன்."

"அந்தோணிங்கிற பேர்ல யாரையாவ
தெரியுமா...?"

"தெரியாது ஸார்...!" -என்று தலையாட்டி
சுதிர், சற்று கலக்கமான குரலில் கேட்டான். "ஸ
எதுக்காக விசாரணைன்னு நா
தெரிஞ்சுக்கலாமா...?"

"வல்லப் மர்டர் செய்யப்பட்ட விவரத்தை
சொன்னார் அவிநாஷ். சுதிர் அதிரிச்சியில் வியர்
நவநீதகிருஷ்ணன் கேட்டார்.

"மதிவாணனோட ரூம் எது...?"

"இதான் ஸார்..." பக்கத்தில் இருந்த ஒ
அறையைக் காட்டினான் சுதிர். இருவரு
அறைக்குள் நுழைந்தார்கள். அறை அவ்வள
சுத்தமாக இல்லை. ஆனால் ஃபிரிஜ், டி.வ
வார்ட்ரோப் என்று அறை ரொம்பியிருந்தது
ஜன்னல் பக்கமாய் போடப்பட்ட கட்டிலில்
தலையணையும், போர்வையும் ஒழுங்கில்லாம
கிடந்தன.

அவிநாஷ் அறையை கிளறிக் கொண்டிருக்க
நவநீதகிருஷ்ணன் சுதிரை விசாரித்தார்.



"திவாகரை உனக்குத் தெரியுமா?"

"மதிவாணனோட ஃப்ரெண்ட்...?"

"ஆமா..."

"தெரியும்... அடிக்கடி இங்கே வருவார்... வல்லபுக்கு அவரும் நெருங்கிய ஃப்ரண்ட் தான்..."

"சமீப காலத்துல மூணுபேரோட ஃப்ரண்ட்ஷிப்பில் ஏதாவது விரிசல் ஏற்பட்டதா...?"

"எனக்குத் தெரியலை... ஸார்..."

"விரிசல் ஏற்பட்ட மாதிரி... ஏதாவது ஃபீல் பண்ணினியா...?"

"இல்லை...! ஆனா..." சுதிர் இழுத்தான்.

"சொல்லுங்க..."

"கடந்து மூணுமாச காலத்தில் - மதிவாணனோட நடவடிக்கைகளில் நிறைய மாறுதல்..."

"மாறுதல்ன்னா...?"

"மதிவாணன் ஜோவியல் டைப். சிரிக்க சிரிக்க பேசுவான். ஒரு சினிமா படம் தவறமாட்டான். நிறைய புஸ்தகம் வாங்கிப் படிப்பான். ராத்திரி பதினோரு மணி வரைக்கும் டி.வி. பார்ப்பான்... கடந்த மூணு மாசமா அவன்கிட்டே இதெல்லாம் இல்லை. ஆபீஸ் போவான். வருவான்... நான் ஏதாவது கேட்டா பதில் சொல்லுவான்..."

"என்ன காரணம்...?"

"காரணத்தையும் கேட்டேன். அவன் சிரிச்சுகிட்டே போயிட்டான். ரெண்டு மூணு தடவை வற்புறுத்தி கேட்டப்ப... இனிமே இப்படி இருக்கத்தான் எனக்குப் பிடிக்கும்ன்னு சொல்லிட்டான்..."

"ஸம்திங் ஸ்ட்ரேஞ்ஜ்..."

அவிநாஷ் பக்கத்தில் வந்தார். கையி வைத்திருந்ததை நீட்டினார்.

"ஸார்! இதைப் பாருங்க..."

## 8

ரோகிணி, ராகவன், ராஜம், கம்பெனி டைரக்டர் ஷிண்டே, சிவராமன் - காஸிவாலி வார்டுக்கு வெளியே இரண்டு மணி நேரமா காத்திருந்த பின் - வார்டிலிருந்து வெளியே வந் டாக்டரை சூழ்ந்து கொண்டார்கள்.

ஷிண்டே கேட்டார்.

"ஹௌ ஈஸ் ராஜசேகரன் டாக்டர்...?"

"ரெண்டு கண்ணிலேயும் அமில பட்டிருக்கு... அது கண்களை ஆழமாலே பாதிச்சிருக்கு... ஐ சைட்டுக்கு அது ஆபத்த ஆபத்து இல்லையாங்கிறதை இன்னும் ஒரு வா ட்ரீட்மெண்ட்டுக்குப் பின்னாடிதான் அ தீர்மானமா சொல்ல முடியும்... எடுத் எக்ஸ்ரேக்கள்... ஐ ஸ்பெஷலிஸ்ட் டேவி மனோகர்க்கு அனுப்பப்பட்டிருக்கு... அவரோ ரிப்போர்ட்டுக்குப் பின்னாடிதான்... எதையுமே சொல்ல முடியும்..."

ரோகிணி கண்களில் நீர்த்திரையோடு டாக்டரிடம் கேட்டாள். "இப்போ போய் அவனை பார்க்கலாமா...?"

"தாரளமா..."

டாக்டர் உள்ளே கையைக் காட்டினார்.

எல்லோரும் உள்ளே போனார்கள். சற்று



உயரமானக் கட்டிலில் சாய்வாக படுக்க வைக்கப்பட்டிருந்தான் ராஜசேகரன். கண்களில் அடர்த்தியான பாண்டேஜ் கட்டு.

ஷிண்டே பக்கத்தில் போய் நின்று - அவ னுடைய தோளைத் தொட்டார். "மிஸ்டர் ராஜசேகரன்..."

அவன் முகம் குரல் வந்த பக்கம் திரும்பியது.

"ஸ...ஸார்..."

"ஒண்ணும் பயப்படாதீங்க... திஸ் வில் பி ஆல் ரைட்..."

"ஸார்... நான் இதை எதிர்பார்க்கலை...! டாக்டர் என்ன சொன்னார்... என்னோட ஐ சைட்டுக்கு எந்த பாதிப்பும் இல்லையே...?"

"நோ ராஜசேகரன்... யூ ஆர் ஆல் ரைட்... உங்க வுட்பி ரோகிணியும் - அவங்க ஃபாதர் மதர் வந்திருக்காங்க... பேசறீங்களா...?"

ராஜசேகரனின் பாண்டேஜ் கட்டு முகத்திலும் - ரோகிணியின் பெயரைக் கேட்டதும் ஒரு மலர்ச்சி பரவியது.

"ரோ... கிணி..." - மெல்ல கூப்பிட்டான்.

ரோகிணி பக்கத்தில் நெருங்கி குரல் தழுதழுப் போடு கேட்டாள். "என்னங்க... கண்ல பெய்ன் இருக்கா...?"

"ராஜசேகரன் புன்னகைத்தான். "ரெண்டு கண்ணுமே நெருப்புக் குழிகளாட்டம் எரியுது..."

ராகவன் குறுக்கிட்டுச் சொன்னார். "உங் களுக்கு ஒண்ணும் ஆகாது மாப்ளே... தைரியமா இருங்க..."

பதினைந்து நிமிஷம் வரைக்கு ஆளுக்கு ஆள்

- மாற்றி மாற்றி ஆறுதல் சொல் கொண்டிருந்துவிட்டு - நர்ஸ் வந்து சொல் பிறகு வெளியே வந்தார்கள். ஷிண்டே ராகவனிடம் சொன்னார்.

"ராஜசேகரனின் கண் சிகிச்சைக்கு தேவை யான எல்லா வசதிகளையும் கம்பெனி நிர்வாகமே செய்து கொடுக்கும். ராஜசேகரனுக்கு பார்வை போய்விடக் கூடிய அபாயத்திற்கு நிர்வாகம் விட்டுவிடாது... செலவு எவ்வளவு ஆயி மானாலும் பரவாயில்லை..."

ராகவன் தலையாட்டினார்.

ஷிண்டே காரில் கிளம்பிப் போனதும் ராகவன், ராஜம், ரோகிணி ஹாஸ்பிடலுக்கு வெளியே வந்தார்கள். ரோகிணி மெல்லிய குரலி சொன்னாள்.

"அப்பா! நாம இப்பவே வீட்டுக்கு போகணுமா...? ஹாஸ்பிடல்ல இன்னும் கொஞ் நேரம் இருந்துட்டுப் போலாமே...?"

ராஜம் குறுக்கிட்டாள்.

"அதான் ரெண்டு மணி நேரம் இரு தோமே...?"

"பாவம்... அவர்க்கு சொந்த பந்தம் யாரு மில்லை... பக்கத்துல யாராவது இருந்தா கொஞ்ச தெம்பாயிருக்கும்..."

"நர்ஸ்தான் இருக்காங்களே...?"

"இருந்தாலும் நாம இருக்கிற மாதிரி ஆகுமா...?"

"நீ இப்ப என்னடி சொல்ற...?"

"இன்னும் ஒரு மணி நேரம் இருந்துட்டு போலாமேன்னு சொல்றேன்..."



"இந்த அதிகப்படியான பாசமெல்லாம் வேண்டாம் ஏதோ வந்தோம். பார்த்தோம். புறப்பட்டோம்ன்னு இருக்கணும்..."

"ஏம்மா... என் கழுத்துல அவர் தாலி கட்டின பின்னாடி இந்த சம்பவம் நடந்திருந்தாலும் இதே மாதிரிதான் சொல்லியிருப்பியா...?"

"அதான் கடவுள் காப்பாத்திட்டானே..."

சொன்ன அம்மாக்காரியை தீர்க்கமாய் முறைத் தாள் ரோகிணி. "ஏம்மா இப்படி பேசறது உனக்கே சரியா இருக்கா...? அவர் வேற யாரோ இல்லேம்மா. எனக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை..."

"நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளைதான். நான் இல்லேன்னு சொல்லலை. ஆனா கட்டிகிட்ட பின்னாடி மாப்பிள்ளை இல்லை...! என்னங்க அந்த காலி ஆட்டோவை நிறுத்துங்க."

ராகவன் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு - காலியாய் போன ஆட்டோவை நிறுத்தினார்.

## 9

அவிநாஷ் தன் கையிலிருந்த - நான்காய் மடிக்கப்பட்டிருந்த ஒரு காகிதத்தை நீட்டினார் நவநீதகிருஷ்ணனிடம்.

"என்ன அவிணாஷ்...?"

"லெட்டர் ஸார்... வல்லப் மதிவாணனுக்கு எழுதியிருக்கார்."

கடிதத்தைப் பிரித்தார் நவநீதகிருஷ்ணன். இரண்டு மாதங்களுக்கு முந்தின தேதியிட்ட கடிதம். கிறுக்கலாய் ஐந்தாறு வரிகள் தெரிந்தன.

அன்புள்ள மதி.

உன்னுடைய ஆபிஸுக்கு டெலிபோன் செய்தேன். நீ பிஸினஸ் டூர் போயிருப்பதாக சொன்னார்கள். இன்னும் இரண்டு நாளில் திரும்புவாய் என்றும் சொன்னார்கள். நீ என்னிடம் சொல்லாமல் போனது என் மனதிற்கு வருத்தம். நடந்த சம்பவம் மோசமானதுதான். அதற்காக அதையே நினைத்துக் கொண்டு - உன் மாமூலான சந்தோஷ வாழ்க்கையை கெடுத்துக் கொள்ள வேண்டாம். நீ ஊரிலிருந்து வந்ததும் இந்த கடிதம் உன் கைக்கு கிடைக்கும். கடிதத்தைப் பார்த்ததும் - பெங்களூரில் இருக்கும் என்னுடைய கெஸ்ட் ஹவுஸுக்கு உடனே வரவும்.

-உன் அன்பு வல்லப்

நவநீதகிருஷ்ணன் நிமிர்ந்தார்.

"இந்த ஒரு கடிதம் மட்டும் தான் கிடைச்சுதா அவிநாஷ்?"

"ஆமா ஸார்..."

"லெட்டர்ல ஒரு சங்கதி ஒளிஞ்சிருக்கு கவனிச்சிங்களா?"

"கவனிச்சேன் ஸார்... ஒரு மோசமான சம்பவம்ன்னு வல்லப் அதை மென்ஷன் பண்ணியிருக்கார்..."

சுதிரிடம் லெட்டரைக் காட்டினார் நவநீதகிருஷ்ணன் அவன் படித்ததும் கேட்டார். "அது என்ன சம்பவம்ன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியாது ஸார்... இந்த லெட்டரையே இப்பத்தான் பார்க்கிறேன். மதியும் இதைப்பத்தி என்கிட்டே பேசினதில்லை."



"அவிநாஷ்! இந்த ரூம்ல இருக்கிற திங்ஸை இன்னும் கொஞ்சம் கிளறிப் பார்க்கணும்..."

இருவரும் கிளற ஆரம்பித்தார்கள். சுதிர் உடம்பு முழுவதும் வியர்த்துப்போய் நகம் கடித்துக் கொண்டு நின்றான்.

# 10

டாக்டர் திட்டவட்டமான குரலில் சொன்னார்.

"எஸ் பெர் டாக்டர் டேவிட் மனோகர் ரிப்போர்ட் படி ராஜசேகரனுக்கு பார்வை திரும்பவும் கிடைக்கிறது சாத்தியமில்லை... அமிலம் பட்டு பொசுங்கிப் போயிருக்கிற அந்தப் பார்வை நரம்புகளுக்கு... மறுபடியும் உயிர்ப்பான ஸெல்கள் அரும்பினால் தான் பார்வை வர சாத்தியம் இருக்கு..."

ரோகிணி, ராகவன், ராஜம் - டாக்டரின் வார்த்தைகளில் அடிபட்டு உறைந்து போயிருக்க - ஷிண்டே மட்டும் அதிர்ச்சியிருந்து மீண்டு டாக்டரிடம் கேட்டார். "வெளிநாட்டுக்குப் போய் ட்ரீட்மெண்ட் எடுத்தா... ஏதாவது பாஸிபிளிடி இருக்கா டாக்டர்...?"

"இல்லை..!.அங்கேயும்... இதே ரிப்ளைதான் கிடைக்கும். மெடிகலி இட் ஈஸ் நாட் க்யூரபிள்... காலப் போக்கில் பை நேச்சர்... அந்த நரம்புகளுக்கு உயிர்ப்பு கிடைத்து - பார்வை வரலாம்... உடம்பில எந்த அற்புதமும் நிகழலாம்." டாக்டர் சொல்லிவிட்டு நகர்ந்து போக - ஷிண்டே ரோகிணியின் அப்பா விடம் திரும்பினார்.

"நான் இதை எதிர்பார்க்கலை..."

"ராஜசேகரன் ஒரு ஜெம்... அவர்க்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டாம். அவருடைய பார்வை பறிபோனதுக்காக - எங்க கம்பெனி அவர்க்கு நஷ்டஈடா அஞ்சு லட்சரூபா வழங்க நான் ஏற்பாடு பண்றேன்..."

ராஜம் முணுமுணுத்தாள். "பத்து லட்சமே குடுங்க... பார்வை போனது போனது தானே...?"

ராகவன் ரோகிணியின் தோளைத் தொட்டா[illegible]

"வாம்மா போலாம்..."

ரோகிணி நிலைத்த பார்வையோடு கேட்டா[illegible]

"எங்கேப்பா..."

"வீட்டுக்கு..."

"என்னோட கல்யாண விஷயத்துல நீங்களு[illegible] அம்மாவும் என்ன முடிவு எடுத்திருக்கீங்கப்பா...?"

"முடிவு வேற எடுக்கணுமாக்கும்...? ஒ[illegible] குருட்டு மனுஷனுக்கு உன்னை எப்படிம்[illegible] கல்யாணம் பண்ணி குடுக்க முடியும்...?"

"ஏன் பண்ணிக் குடுத்தா என்ன...?"

"ரோகிணி! நீ என்ன பேச்சுப் பேசறே...?"

"அப்பா, எனக்கும் அவர்க்கும் கல்யாண[illegible] நிச்சயம் பண்ணி ஊரறிய வெத்திலை பாக்[illegible] மாத்திகிட்டது நீங்கதானே...?"

"மாத்திகிட்டா என்னம்மா...? மணவறையிலே மாப்பிள்ளைக்கு பக்கத்துல பொண்ணு உட்கார்ந்த பின்னாடி கூட எவ்வளவோ கல்யாணம் நின்னு போயிருக்கு."

"எனக்கு கல்யாணம் ஆன பின்னாடி அவர்க்கு



பார்வை போயிருந்தா... அப்ப உங்க முடிவு என்னவாயிருக்கும்ன்னு நான் தெரிஞ்சுக் [illegible]"

"அதை ஏன் நினைச்சு பார்க்கணும்? இப்ப கல்யாணம் நடக்கலை... அதிர்ஷ்டம் நம்ம பக்கம் இருக்கிறதுனாலதான் - உன் கழுத்துல தாலி ஏர்றதுக்கு முந்தி - இந்த அசம்பாவிதம் நடந்திருக்கு..."

"அப்படீன்னா இனிமே வேற ஒருத்தர்க்கு... என்னைக் கல்யாணம் பேசி முடிக்கப் போறீங்க இல்லையா?"

"ஆமா..."

"எனக்கு இஷ்டமில்லேன்னா..."

"ரோகிணி! நீ என்ன பேச்சு பேசிட்டிருக்கே...?"

"அப்பா...! நான் அவரையே கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு இருக்கேன்..."

"கண்ணில்லாத அந்த மனுஷனையா...?"

"கண்ணில்லேன்னா என்னப்பா மனசு இருக்கே...?"

ராஜம் நெருப்பாய் சீறினாள். "உனக் கென்னடி... மூளை குழம்பிப் போச்சா...? கண் அவிஞ்ச மனுஷனைக் கட்டிக்கிட்டு காலம் பூராவும் நீயும் இருட்டிலேயே இருக்கப் போறியா...?"

"இருட்டுல இருக்கப் போகிற அவர்க்கு நான் வெளிச்சமா இருக்கப் போறேன்..."

"என்னங்க இவ... ஏதோ தத்து பித்துன்னு பேசிட்டிருக்கா. நீங்களும்... கண்டிப்பா பேசாமே... சாவகாசமா வம்பளந்துகிட்டிருக்கீங்க...?"

ராகவன் ரோகிணியை ஏறிட்டார். "வீட்டுக்கு வா பேசிக்கலாம்..."

"எனக்கு இங்கேயே ஒரு முடிவு தெரியணும்."

ஷிண்டே குறுக்கிட்டார். "பிரச்னை எதுவாயிருந்தாலும் சரி. வீட்டுக்குப் போய் பேசிக்கிறது தாம்மா நல்லது..."

"நோ... ஸார்... வீட்டுக்குப் போனா என்னால எதுவும் பேசமுடியாது அப்படி பேசினாலும் பரவாயில்லை. அவரைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்குவேன்..."

ராகவன் பெரிய குரலெடுத்து கத்தினார்.

"இப்ப நீ வீட்டுக்கு வரப்போறியா இல்லையா...?"

"அவரை கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நீங்க சம்மதம் குடுத்தா வீட்டுக்கு வர்றேன்..."

"உனக்கு இத்தினி நெஞ்சழுத்தமா...?"

"ஏன் இருக்கக் கூடாதா...?"

ராகவன் தோளில் போட்டிருந்த துண்டை உதறினார். "ராஜம்! வா... நாம... போலாம்... அவ எக்கேடோ ஒழிஞ்சு போகட்டும்..."

## 11

"இதான் ஸார்... நெம்பர் எய்ட்டி சிக்ஸ்..." அவிநாஷ் சுட்டிக் காட்டிய வீட்டுக்கு முன்னால் ஜீப்பை நிறுத்தினார் நவநீதகிருஷ்ணன்.

டெரஸ் வீடு. கம்பிப் போட்ட காம்பௌண்ட் கேட். வயதுக்கு வராத இரண்டு தென்னை மரங்கள். புஷ்டியாய் ஒரு கொய்யா மரம்.



காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு இருவரும் உள்ளே போனார்கள். கட்டிப்போட்டிருந்த நாய் ஒரேயொரு தடவை குரைத்துவிட்டு - அசுவாரசியமாய் வேறு பக்கம் பார்த்தது.

அவிநாஷ் காலிங் பெல்லுக்கு வேலை கொடுத்தார்.

கதவு திறந்தது.

ஒரு பெண் எட்டிப் பார்த்தாள். மாநிற முகம். குங்குமமும், மூக்குத்தியும் மின்னியது. போலீஸ் யூனிபார்ம் - அவளுடைய பெரிய விழிகளில் கலக்கத்தை விதைத்து பயத்தை அறுவடை செய்தது.

"யா...யார் வேணும்...?"

"திவாகர் இருக்காரா...?"

"அ..அவர் வெளியூர் போ...போயிருக்கார்."

"எந்த ஊர்...?"

"திருச்சிக்கு..."

"என்ன விஷயமா...?"

"ப்ரெண்ட் ஒருத்தரை பார்க்கப் போறதா சொன்னார்."

"எப்ப போனார்...?"

"ரெண்டு நாளைக்கு முந்தி..."

"எப்ப வருவார்...?"

"வாரம் பத்து நாளாகும்ன்னு சொன்னார்."

"திருச்சியில் யாரந்த ஃப்ரண்ட்...?"

"எ... எனக்கு தெரியலை..."

"நீங்க... அவரோட ஒய்ஃப்பா...?"

"ஆமா...!" என்று தலையாட்டியவள் சற்றே

பயத்துடன் கேட்டாள். "எதுக்காக அவரை விசாரிக்கறீங்க...?"

"வல்லபை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்... என் கணவரோட ஃப்ரண்ட்... ரெண்டு மூணுதடவை வீட்டுக்கும் வந்திருக்கார்..."

"அந்த வல்லப் நேற்று ராத்திரி ஹோட்டல் யாத்ரா கார் பார்க்கிங்கில் வெச்சு கொலை செய்யப்பட்டிருக்கார்."

"கொ... கொலையா...?" அவளுடைய உதடுகள் மேலும் கீழுமாய் பிளந்து - பல் வரிசையைக் காட்டியது.

"வல்லபுக்கு நெருங்கின ஃப்ரண்ட்ஸ்... உங்க கணவர் திவாகரும், மதிவாணனும்னு விசாரணையில் தெரிஞ்சுது... அதான் உங்க கணவரை விசாரிச்சுட்டு போலாம்ன்னு வந்தோம்..."

சேலைத் தலைப்பால் திவாகரின் மனைவி கழுத்து வியர்வையை ஒற்றிக் கொண்டாள். "அது சம்பந்தமா அவரை என்ன விசாரிக்கணும்...?"

"அந்தோணிங்கற பேரைச் சொல்லிகிட்டு எவனோ ஒருத்தன் வல்லபை ஹோட்டலுக்கு வரவழைச்சு... அவரை கொலை பண்ணியிருக்கான். அந்தோணின்னு யாரையாவது உங்க கணவர்க்கு தெரியுமா...?"

"அந்த பேர்ல யாரையும் தெரியாது..."

"வல்லப் உங்க வீட்டுக்கு ரெண்டு மூணு தடவை வந்திருக்கிறதா சொன்னீங்க...? கடைசியா அவர் எப்ப வந்தார்...?"

அவள் யோசித்துவிட்டு சொன்னாள்.

"ரெண்டு மாசம் இருக்கும்."

"மதிவாணன் அடிக்கடி இங்கே வருவாரா...?"

"ம்... வாரத்துல எப்படியும் ஒரு வாட்டி வருவார்..." நவநீதகிருஷ்ணன் அவிநாஷுக்கு கண் ஜாடை காட்ட - அவர் தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்திருந்த - அந்தக் கடிதத்தை எடுத்து - திவாகரின் மனைவியிடம் நீட்டினார்.

"அந்த லெட்டர் மதிவாணனுக்கு வல்லப் எழுதியது ரெண்டு மாசத்துக்கு முந்தின லெட்டர்... படிச்சுப் பாருங்க..."

அவள் வாங்கிப் படித்துவிட்டு நிமிர்ந்தாள். நவநீதகிருஷ்ணன் கேட்டார். "லெட்டர்ல வல்லப் மென்ஷன் பண்ணிருக்கிற அந்த மோசமான சம்பவம் எதுன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"எ... எனக்கு தெ... தெரியலை..."

"கடந்த ரெண்டு மாசமா உங்க கணவரோட நடவடிக்கைகள் எப்படி இருந்துச்சுன்னு சொல்ல முடியுமா...?"

"எப்பவும் போல்தான் இருந்தார்."

"அவரோட ரூமை நாங்க சர்ச் பண்ணணும்..."

"வா... வாங்க..." - அவள் வழிவிட்டு நின்று பக்கத்திலிருந்த அறையைக் காட்டினாள்.

இருவரும் உள்ளே போனார்கள்.

## 12

"நீ... பண்ணின காரியம் உனக்கே சரின்னு படுதா ரோகிணி?" - ராஜசேகரன் கண்களில் பாண்டேஜ் கட்டோடு கட்டிலில் சம்மணமிட்டு உட்கார்ந்தபடி கேட்டான்.

கட்டிலின் நுனியில் பட்டும் படாம
உட்கார்ந்திருந்த ரோகிணி புன்னகைத்தாள் "எ
நான் பண்ணினதில் என்ன தப்பு...?"

"எனக்காக... உன்னோட... அப்பா, அம்மாவை
பகைச்சு கிட்டது சரின்னு என் மனசுக்கு
படலை..."

"நம்ம கல்யாண விஷயத்தில் அவங்க
நடந்துகிட்டது சரின்னு என் மனசுக்குப் படலை.
மனுஷ புத்தி தடுமாறி போறது சகஜம் தா
அதுக்காக இப்படியா...?"

"பார்வையில்லாதவனுக்கு தன் பொண்ணை
தர யார் தான் ஒத்துக்குவாங்க... என்னை
பொறுத்தவரைக்கும் உன்னோட அப்பாவு
அம்மாவும் எடுத்த முடிவு சரிதான்..."

"முடிவு சரியா இருக்கலாம்... ஆனா அந்
முடிவல மனிதாபிமானமும் இல்லை... கல்யாண
முடிஞ்ச பின்னாடி... உங்களுக்கு இப்படி ஒ
நிலைமை... ஏற்பட்டிருந்தா... என்ன பண்ண
யிருப்பாங்களாம்...? கோர்ட் ஏறி விவாகரத்துக்கு
போயிடுவாங்களா...?

"நடக்காததைப் பத்தி ஏன் பேசணும்...?"

"இதோ பாருங்க... என்னை கல்யாண
பண்ணிக்க உங்களுக்கு இஷ்டமா இல்லியா...?"

"இஷ்டம் தான்... ஆனா..."

"இந்த ஆனா... ஆவென்னாவெல்லா
என்கிட்ட வேண்டாம்... உங்களுக்கு இப்ப ஏற்
பட்டிருக்கிற குறை... என்னைப் பொறுத்த
வரைக்கும் ஒரு பெரிய ஸைபர். இந்தக் குறையே
உங்களுக்குத் தெரியாமே... என்னால குடும்பம்



நடத்த முடியும். ஒரு சந்தோஷமான வாழ்க்கை
யையும் கொடுக்க முடியும்..."

"எனக்கு பார்வை வரவே வாய்ப்பில்லைன்னு...
டாக்டர் சொன்னது... உனக்கு பெரிசா
தெரியலையா... ரோகிணி...?"

"உங்க உடல்ல ஏற்பட்டிருக்கிற குறை
மத்தவங்களுக்கு பூதாகரமாக தெரியலாம். ஆனா
எனக்கு அப்படியில்லை..."

"என் மேல் பரிதபப்பட்டு கல்யாணம்
பண்ணிக்கிறியா. இல்லை எனக்கு..." பேச முயன்ற
ராஜ சேகரனை குறுக்கிட்டு கையமர்த்தினாள்.
"வீணா எந்தக் கற்பனையும் வேண்டாம்...
உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கிறதுக்குக்
காரணம் உங்க மனசு தான். நான் ஒரு
சிறுநீரகத்தை... ஒருத்தர்க்கு தானம் பண்ணி
யிருக்கேன்னு சொன்ன பின்னாடியும் என்னை
கல்யாணம் பண்ணிக்க நீங்க சம்மதம் குடுத்
தீங்க... அந்த பெருந்தன்மையான மனசு உலகத்தில்
இருக்கிற எந்த ஆம்பிளைக்கும் வராது..."

"சிறுநீரக தானங்கிறது ஒரு நல்ல விஷயம்...
அதை என்கரேஜ் பண்ணினேன்... அவ்வளவு
தான்..."

"உங்களுக்கு அந்தவிஷயம் சாதாரணமா
தெரியலாம். ஆனா என்னைப் பொறுத்த
வரைக்கும்... எந்த ஆண் மகனுக்கும் இல்லாத
துணிச்சல் உங்களுக்கு இருக்கு. அந்த
துணிச்சலுக்காகத்தான் உங்களை கல்யாணம்
பண்ணிக்கப் போறேன்..."

"என்னை நீ கல்யாணம் பண்ணிக்கிறதுனால...

உன்னோட அம்மாவுக்கும் அப்பாவுக்கு எவ்வளவு வருத்தம்...?"

"அந்த வருத்தம் தற்காலிகமானதுதான்.."

"இருந்தாலும்..."

"நோ மோர் வேர்ட்ஸ்... நீங்களும் நானு கல்யாணம் பண்ணிக்கப் போறோம். சந்தோஷம குடும்பம் நடத்தப் போறோம். இன்னு பதினைஞ்சு நாள்ல கண்கட்டை அவிழ்க்க போறாங்க. அதுக்கப்புறம் ஒரு நல்ல நா பார்த்து... நம்ம கல்யாணத்தை முடிச்சுக்க போறோம்."

"ரோகிணி! நல்லா யோசனை பண்ணு..."

"என்னது... இனிமே யோசனையா... முடிவுக்கே வந்துட்டேன்..."

"நான் ஹாஸ்பிடலிலிருந்து வெளியே வ வரைக்கும் நீ வீட்டுக்குப் போகாமே எங் தங்கியிருக்கப் போறே...?"

"ஒரு தோழி வீட்ல இடம் கிடைச்சிருக்கு..."

"உன்னோட தைரியம் எந்தப் பெண்ணுக்கு வராது..."

"என்னோட தைரியத்தைப் பத்தி சாவகாசம பேசலாம்... இப்ப நீங்க மாத்திரை சாப்பிட வேண்டிய நேரம்..." சொன்ன ரோகிணி அருகி இருந்த கப்போர்டை திறந்து - மாத்திரை பட்டையை வெளியே எடுத்தாள்.

## 13

திவாகரின் அறைக்குள் நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும் நுழைந்தார்கள். மேஜை, சுவ



அலமாரி இவைகளைத் திறந்து - உள்ளேயிருந்து பொருட்களை கிளறிக் கொண்டே திவாகரின் மனைவியிடம் விசாரணை செய்தார்கள்.

"வல்லபை பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?"

"எ... எ... எனக்கு... அவரைப்பத்தி எ. எதுவும் தெரியாது... என்னோட கணவர்க்க அவர் ஃப்ரெண்ட் அவ்வளவு தான்..."

"உங்களுக்கு கல்யாணமாகி எவ்வளவு வருஷம் இருக்கும்?"

"ரெண்டு வருஷம்...?"

"வீட்ல வேற யார் யாரெல்லாம் இருக்காங்க..."

"நானும் அவரும் மட்டுந்தான்..."

அவிநாஷ் மேஜை டிராயரை கிளறிக் கொண்டிருந்தார். பால் பாயிண்ட் பேனாக்கள், டெல்லி ட்ரான்ஸிஸ்டர், ஸ்டேப்ளர், உடைந்த கூலிங்கிளாஸ், புட்டபர்த்தி சாய்பாபா படம். துருப்பிடித்த கத்திரிக்கோல், ஒரு பழைய டயரி. (அதை புரட்டிப் பார்த்த போது - இரண்டு சேலை ஒரு பாவாடை நாலு பாண்ட் நாலு சர்ட் என்று சலவை கணக்குகள், கேஸ் சிலிண்டர் வந்த தேதி. காலாவதியான நாள்...)

"திருச்சியில் எந்த ஃப்ரண்ட் பார்க்கப் போயிருக்கார்ன்னு உங்களுக்குத் தெரியாதா...?"

"தெரியாது..."

"எப்ப வருவார்ன்னு சொன்னீங்க...?"

"வாரம் பத்து நாளாயிடும்..."

"ராத்திரி நேரங்கள்ல... வீட்ல தனியாவா... இருக்கீங்க...?"

"வேலைக்காரி துணைக்கு வந்து படுத்துக்குவா..."

நவநீதகிருஷ்ணனும் - அவிநாஷும் அறை சோதனையையும் விசாரணையையும் முடித்து கொண்டு வெளியே வந்தார்கள். ஜீப்பில் போகு போது அவிநாஷ் சொன்னார்.

"வல்லப், மதிவாணன், திவாகர் இவங்க மூனு பேர்க்கும் மத்தியில் ஏதோ ஒரு மோசமான சம்பவம் நடந்திருக்கு ஸார். அந்த சம்பவம் என்னான்னு கண்டுபிடிச்சா... கேஸ் க்ளிய ராயிடும்..."

"வல்லப் வீட்டு வேலைக்கார ஆட்களை என்கொய்ர் பண்ணினா ஏதாவது தகவல் கிடைக்கலாம். பி.ஏ. நாகராஜனைப் பத்தி என்ன நினைக்கறீங்க அவிநாஷ்?"

"அந்த ஆள் கொஞ்சம் மூடி டைப்... மாதிரி தெரியுது ஸார். விஷயம் இருக்கு ஆனா வெளியே வரமாட்டேங்குது..."

"மதிவாணனோட சொந்த ஊர் திருப்புறம்பியத் துக்கு கான்ஸ்டபிளை அனுப்பி - ஆளை கையோடு கூட்டிட்டு வர ஏற்பாடு பண்ணிடுங்க... அதே போல் திவாகர் திருச்சிக்கு எந்த ஃப்ரண்ட் பார்க்கப் போயிருக்கார்ன்னு... என்கொய் பண்ணனும்..."

"எஸ்... ஸார்..."

ஜீப் சில நிமிட போக்குவரத்து நெரிசல் பயணத்திற்குப் பிறகு வல்லப் பங்களாவுக்குள் நுழைந்து போர்டி கோவில் நின்றது.

பி.ஏ. நாகராஜன் எதிர்கொண்டார். "நீங்க போலீஸ் ஸ்டேஷன்ல சொன்ன மாதிரியே - வேலைக்கார ஆட்கள் எல்லாரையும் இருக்க



வெச்சிருக்கேன் ஸார். நீங்க விசாரணை பண்ணலாம்..."

"மொத்தம் எத்தினி வேலைக்காரங்க...?"

"நாலு பேர்... சமையல் ஆள் ராஜாமணி அய்யர், தோட்டக்காரன் வடிவேலு... டிரைவர் சாத்தப்பன்... வீட்டைச் சுத்தம் பண்ற வேலைக்காரி சாவித்திரி..."

உள்ளே போனார்கள்.

வரவேற்பறை சுவரோரமாய்... அந்த நான்கு பேரும் நின்றிருக்க - நவநீதகிருஷ்ணன் விசாரணையை ஆரம்பித்தார். டிரைவர் சாத்தப்பனைத் தவிர மற்ற மூன்று பேர் சொன்ன பதில்களில் வெறும் சக்கைதான் இருந்தது. நிறைய கேள்விகளுக்கு தெரியாது என்கிற தலையாட்டல்.

டிரைவர் சாத்தப்பனை விசாரித்த போது - அவன் சொன்ன பதில்கள் கீழே சில வரிகளில்

"எத்தனை வருஷமா இந்த வீட்ல டிரைவரா இருக்கே...?"

"ஆறு வருஷமா ஸார்.."

"டிரைவர் நீ இருக்கும் போது - ஹோட்டல் யாத்ராவுக்கு அவரே ஏன் காரை ட்ரைவ் பண்ணிகிட்டு போனார்...?"

"சில முக்கியமான ஆட்களை சந்திக்கப் போறப்ப... அவர் என்னை கூப்பிட்டுக்க மாட்டார்..."

"எத்தினி கார் அவர்க்கு...?"

"ரெண்டு... கண்டேசா... அம்பாஸிடர்."

"அம்பாஸிடரை எங்கே காணோம்...?"

"பங்களாவுக்கு பின்பக்கமா இருக்கிற ஷெட்ல அடைச்சு வெச்சருக்கு..."

"ஏன்... ரிப்பேரா...?"

"ரிப்பேர் மாதிரியும் தெரியலை ஸார்... ரெண்டு மாசத்துக்கு முந்தி ஒரு நாள் காலையில நா ட்யூட்டிக்கு வர்றப்ப அம்பாசிடரை கொண்டு போய் ஷெட்ல விட்டுட்டு வரச்சொன்னார். காரணம் கேட்க எனக்குத் தைரியம் வரலை..."

நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"காரை ஷெட்ல கொண்டு போய்விட்டு - இது எவ்வளவு மாசமாச்சுன்னு சொன்னே...?"

"ரெண்டு மாசம் ஸார்..."

## 14

ஷிண்டே ராஜசேகரனின் கையைப் பற்றி குலுக்கினார். "காங்கிராட்ஸ்... மிஸ்டர் ராஜசேகரன்... உங்க கல்யாணத்துக்கு என்னோட அட்வான்ஸ் கங்கிராட்ஸ்..."

பக்கத்தில் நின்றிருந்த ரோகிணி - தன் கையில் வைத்திருந்த அழைப்பிதழை நீட்டினாள்.

"நான் வரலாமா...?"

அணிந்திருந்த கறுப்புக்கண்ணாடியை சரியாய் பொருத்திக் கொண்டு புன்னகைத்தான் ராஜ்சேகரன்.

"ஸார்! என்னோட வெல் விஷர் நீங்க...! தாலியை உங்கையாலே... எடுத்துத் தரணும்ன்னு நான் விரும்பறேன்..."



"ஷ்யூர்... ஷ்யூர்..." சொல்லிக் கொண்டே பத்திரிகையைப் பிரித்தார் ஷிண்டே. "கல்யாணம் பதினாலாம் தேதி சண்டே. வசதியான நாள் தான். வென்யூ... பெருமாள் கோயில்...! வந்துடறேன்...!" - என்றவர் "பை... த... பை... ரோகிணி, இந்த கல்யாணத்துக்கு உன்னோட அம்மாவும், அப்பாவும் வர்றாங்களா இல்லையா?" என்று கேட்டார்.

"அவங்களை நான் கூப்பிலை ஸார்."

"அது தப்பும்மா..."

"போய் கூப்பிட்டாலும் அவங்க வரமாட்டாங்க ஸார்..."

"நீ அவங்களை கன்வின்ஸ் பண்ணியிருக்கலாம்..."

"அது சாத்தியமில்லை ஸார்.. ஏன்னா என்னோட ஃபாதர் மதரைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்.."

ராஜசேகரன் பெருமூச்சு விட்டான்.

"நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன் ஸார்... இந்த விஷயத்தில் ரோகிணி மசியற மாதிரியில்லை..."

"ஐ அப்ளிஷியேட் ஹெர் டிஷன்...! ரோகிணி உங்களுக்கு மனைவியா... அமையற... பூர்வ ஜென்ம புண்ணியம் மிஸ்டர் ராஜசேகரன்."

"நானும் அதை மறுக்கலை ஸார்... பட்... ரோகிணியோட பேரண்ட்ஸ் நிலைமையிலிருந்து பார்க்கும் போது - இந்த கல்யாணம் எனக்கு உறுத்தலா படுது... பெத்தவங்க என்னிக்குமே... தன்னோட பொண்ணை ஊனமில்லாத ஒருத்த

. னுக்குத் தான் கட்டிக் குடுக்கத்தான் முயற்சி பண்ணுவாங்க... அந்த வகையில் பார்க்கும் போது - அவங்க பக்கம் நியாயம் இருக்கிற மாதிரி எனக்குப் படுது..."

ரோகிணி புன்னகையோடு ஷிண்டேயை ஏறிட்டாள். "இந்த மாப்பிள்ளைப் பத்தி அவங்க புரிஞ்சுக்கலை ஸார்... என்னோட பேரண்ட்ஸ் இவரோட ஊனத்தைப் பார்க்கிறாங்க... நான் இவரோட மனசைப் பார்க்கிறேன்... மிஸஸ் ராஜசேகரன்னு எல்லோரும் சொல்றதை நான் விரும்பறேன்..."

"ரியலி... யூ ஆர் கிரேட்... ரோகிணி!"

## 15

"அந்தக் காரை பார்க்கலாமா...?" நவநீதகிருஷ்ணன் நாகராஜனிடம் கேட்க - அவர் தலையாட்டினார். "வாங்க ஸார்..."

டிரைவரையும் அழைத்துக் கொண்டு பங்களாவின் பின் பக்கமிருந்து கார் ஷெட்டை நோக்கிப் போனார்கள். நாகராஜன் தன் கையிலிருந்த சாவிக் கொத்தை உபயோகித்து ஷெட்டின் கதவைத் திறந்தார்.

சாக்லேட் நிற அம்பாஸிடர் கார் தூசியில் குளித்தபடி தெரிந்தது. புதிய கார் என்பது தூசியின் பின்னணியிலும் பளிச்சிட்டது.

"ரெண்டு மாசத்துக்கு முந்தி - இந்த ஷெட்ல கொண்டு வந்துவிட்ட காரை - அதுக்குப் பின்னாடி வல்லப் அதை எடுக்கவே இல்லையா?"

"இல்ல ஸார்..."



"காரை இப்படியே விட்டா எஞ்சின் ஸ்பாயிலாயிடுமே...? நீ ஒரு டிரைவர். இதைப் பத்தி அவர்கிட்டே சொன்னியா...?"

"சொன்னேன் ஸார்..."

"பதிலுக்கு என்ன சொன்னார்..?"

"முறைச்சார் ஸார்.. நான் என்ன சொல்றேனோ அது மட்டும் பண்ணினா போதும்ன்னு கத்தினார் ஸார்."

அவிநாஷ் காரைச் சுற்றி வந்தார்.

கார் விபத்துக்குள்ளான மாதிரி தெரியவில்லை. ஒரு நசுங்கலோ ஒரு சப்பையோ எங்கேயும் கிடையாது.

நவநீதகிருஷ்ணன் காரின் பின்பக்கக் கதவைத் திறந்தார். தூசி மண்டிய டர்க்கி டவல் ஃபினிஷ் சீட் கவர் கண்ணிலடித்தது. அவிநாஷும் உள்ளே எட்டிப் பார்த்தார். கார் புதுசு மாதிரி இருக்கு. எதுக்காக... இங்கே கொண்டு வந்து வீணா அடைச்சு வெச்சிருக்கார்ன்னு தெரியலையே...?

"ஏதாவது ஆக்ஸிடெண்ட் பிராப்ளமாக இருக்குமோ...?"

"அப்படியும் தெரியலையே..."

டாஷ்போர்டைத் திறந்து பார்த்தார் நவநீத கிருஷ்ணன். பாலீஷ் கிளாத் மஞ்சள் துணியும், டோண்ட் ஒர்ரி பிஷேப்பி கேஸட்டும் இருந்தது.

"ஸார்..."

"ம்..."

"காரின் பின்சீட்டுக்கு கீழே என்னமோ கிடக்கு..."

"எடுங்களேன்..."

அவிநாஷ் எடுத்தார்.

ஆனந்தவிகடன் வார இதழ் அது. புத்தகம் மோசமாய் மடங்கியிருந்தது.

"எந்த இஷ்யூன்னு பாருங்க..."

"ஜூலை ஃபோர்ட்டீன்த்..."

"அப்படீன்னா இன்னிக்கு... ரெண்டு மாசமாகுது..." அவிநாஷ் முதல் பக்கத்தைத் திருப்பினார். ரப்பர் ஸ்டாம்ப் முத்திரையிட்ட அந்த முகவரி பளிச் சென்று பார்வையில் மோதியது.

முநித் ந்யூஸ் ஏஜென்ஸி.

நெ. 32 மெயின்ரோடு.

தொட்டக்கோம்பை. (போஸ்ட்)

"ஸார்... இந்த ஆனந்தவிகடனை... தொட்டக்கோம்பையில வாங்கியிருக்காங்க... அந்த ஊர் நியூஸ் ஏஜெண்ட் அட்ரஸைப் பார்த்தீங்களா...?"

"தொட்டக்கோம்பை எங்கேயிருந்து?" நாகராஜனிடம் கேட்டார் நவநீதகிருஷ்ணன்.

"பொன்னூத்து ஹில்ஸில் அது ஒரு கிராமம் ஸார்."

"வல்லப் அங்கே போவாரா...?"

"அங்கே அவர்க்கு ஒரு வீடு இருக்கு... வருஷத்துல ஒரு தடவை போயிட்டு வருவார்..."

"கெஸ்ட் ஹவுஸா...?"

"ம்... அப்படியும் வெச்சுக்கலாம்..."

"ரெண்டு மாசத்துக்கு முந்தி தொட்டக்கோம்பை போனாரா வல்லப்?"

"எனக்குத் தெரியலை..."

"நீங்க அவர்க்[illegible] பி.ஏ. உங்களுக்கு அவர்



போனது எப்படி தெரியாமே இருக்கும்...?"

"எல்லா விஷயங்களையும் அவர் என்கிட்டே சொல்றதில்லை ஸார். ஊரிலிருந்து போன் பண்ணி - கம்பெனி நிலவரத்தைப் பத்தி கேப்பார்..."

நவநீதகிருஷ்ணன் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே அவிநாஷ் மறுபடியும் சீட்டுக்கு கீழே குனிந்தார்.

எதையோ எடுத்தார்.

# 16

வீட்டு வாசலில் டாக்ஸி நிற்பதைப் பார்த்து - முறத்தில் அரிசி புடைத்துக் கொண்டிருந்த ராஜம் பதட்டமாய் எழுந்தாள்.

"என்னங்க?"

உள்ளேயிருந்த கணவனை நோக்கி குரல் கொடுக்க ராகவன் வெளியே வந்தார். "என்ன ராஜம்...?"

"வாசல்ல டாக்ஸி வந்து நிக்குது..."

இருவரும் வாசலுக்கு வந்தார்கள். டாக்ஸியினின்றும் ரோகிணி இறங்கிக் கொண்டிருக்க - உள்ளே ராஜசேகரன் கறுப்புக் கண்ணாடியோடு - ஸீட்டுக்கு சாய்ந்திருந்தான்.

"என்னங்க... ரோகிணி வர்றா..."

"வரட்டும்... வரட்டும்... நீ உள்ளே போ..."

"ஏதும் பேசிடாதீங்க..."

"அவகிட்டே என்ன பேசணும்... எப்படி பேசணும்ன்னு எனக்குத் தெரியும்... நீ அவளுக்கு மூஞ்சியைக் காட்டாமே உள்ளே போயிடு..."

ராஜும் உள்ளபோக - ராகவன் - வாசல் கதவை அடைத்த மாதிரி வந்து நின்று கொண்டார். ரோகிணி படியேறி வந்தாள்.

"அப்பா..."

"என்ன விஷயம்..."

"உங்க மாப்பிள்ளை வந்திருக்கார். உங்ககிட்டே யும் அம்மாகிட்டேயும் ஆசீர்வாதம் வாங்கணும்ன்னு ஆசைப்படறார்..."

"ஆசிர்வாதம் தானே... மளிகை கடையில போய் வாங்கிக்கச் சொல்லு..."

"அப்பா! நீங்க கோபப்படறதுல நியாயமே இல்லை... சொல்லிக் கொண்டே மேலும் ஒரு படி ஏறி வந்தவனை கையமர்த்தினார் ராகவன்."

"பேச வேண்டியதை அங்கேயே நின்னு பேசிட்டுப் போயிடு..."

"அம்மாவை கூப்பிடுங்கப்பா..."

"அவ வரமாட்டா... எனக்கு பொண்ணே இல்லைன்னு... நேத்திக்கு தான் தலைக்கு குளிச்சா... உங்கம்மா..."

"அப்பா! எனக்காக வேண்டாம்... அவர்க்காகவாவது... உங்க கோபத்தை விட்டுக் குடுக்கக் கூடாதா..."

"இது கோபமில்லேம்மா... மான உணர்ச்சி...! எவனோ ஒருத்தனுக்காக... இத்தினி வருஷம் வளர்த்து ஆளாக்கின எங்களை துச்சமா நினைச்சியே...» அந்த நினைப்போட நெருப்பு என்னிக்குமே தகிச்சுகிட்டுத்தான் இருக்கும்..."

"அப்ப நீங்க ஆசிர்வாதம் பண்ண மாட்டீங்க...?"



"உன் புருஷனை கூட்டிட்டு வந்து எம் முன்னாடி நிக்கு வேணும்ன்னா என்னையும் தண்ணியையும் தெளிச்சு விடறேன்..."

ராகவனையே சில விநாடி நேரம் - உஷ்ணமாய் முறைத்து விட்டு டாக்ஸிக்குத் திரும்பினாள் ரோகிணி.

ராஜசேகரன் ஆவலாய் கேட்டான்.

"ரோகிணி! என்ன சொன்னார் உங்கப்பா...?"

"அவரோட இருதயத்தை வித்து ரெண்டு நாளாச்சாம்...."

## 17

காரின் பின்சீட்டுக்கு கீழேயிருந்து - அவிநாஷ் எடுத்த அந்த சிறிய பொருள் லேசாய் மினுமினுப்புக் காட்டியது.

"அவிநாஷ்! என்ன அது...?"

"ஏதோ கண்ணாடிச் சில்லு மாதிரி தெரியுது ஸார்."

"கொண்டாங்க பார்க்கலாம்..."

வாங்கிப் பார்த்த நவநீதகிருஷ்ணன் சில விநாடிகளுக்குப் பின் அவிநாஷை ஏறிட்டார். "இது என்னன்னு உங்களாலே ஐடெண்டிஃபை பண்ண முடியுதா?"

அவிநாஷ் உற்றுப் பார்த்துவிட்டு "புரியுது ஸார்" என்றார்.

"சொல்லுங்க பார்க்கலாம்."

"இது ஒரு கூலிங்கிளாஸோட கண்ணாடிச் சில்லு ஸார்.."

"இந்த நிற கூலிங்கிளாஸை எந்த இடத்திலாவது பார்த்த ஞாபகம் உங்களுக்கு இருக்கா...?"

"திவாகர் வீட்டு... மேஜை டிராயர்... ஒரு உடைஞ்ச கூலிங் கிளாஸைப் பார்த்தோம். அதோட சில்லு மாதிரி தெரியுது ஸார்..."

"அதே தான்..." என்றார் நவநீதகிருஷ்ணன். பின் நாகராஜனிடம் திரும்பி கேட்டார்.

"வல்லப் தொட்டக்கோம்பைக்கு போகும் போது திவாகரையும் மதிவாணனையும் கூட்டிப் போறது உண்டா...?"

"எனக்குத் தெரியாது ஸார்..."

"நாகராஜன்! போலீஸ்கிட்டே நீங்க பல விஷயங்களை மறைச்சே பேசறீங்க...இது உங்களுக்கு நல்லதில்லை..."

"ஸாரி ஸார்! எனக்குத் தெரிஞ்சதை சொல்றேன்... அவ்வளவுதான். கம்பெனி, ஆபிஸ் விவகாரங்களில் தான் - நான் அவர்க்கு பி.ஏ. பர்சனல் விஷயங்களில் பத்தடி தள்ளியே நிப்பேன்.."

"ரெண்டு மாசங்களுக்கு முன்னாடி வல்லப் திவாகர் - மதிவாணன் மூணு பேர்க்கும் மத்தியில் ஏதோ ஒரு வேண்டத்தகாத சம்பவம் நடந்திருக்கு. அந்த சம்பவம் தொட்டக்கோம்பையில் நடந்திருக்கலாம். சம்பவம் நடந்த இடம் இந்த காராக இருக்கலாம்... இதைப்பத்தின உண்மைகளை உங்களுக்கோ - டிரைவர்க்கோ தெரிஞ்சிருந்தா இப்பவே சொல்லிடறது உத்தமம். நாங்களாவே அந்த உண்மைகளை கண்டுபிடிக்க நேர்ந்தா, உங்களை கைது செய்ய வேண்டியிருக்கும்..."



நாகராஜனும், டிரைவரும் தீர்க்கமாய் தலைகளை ஆட்டினார்கள். நிஜமா எங்களுக்கு ஒண்ணும் தெரியாது ஸார்...

## 18

"இன்னும் எவ்வளவு தூரம் நடக்கணும் ரோகிணி. காலெல்லாம் கெஞ்சுது." ராஜசேகரன் பெருமூச்சுவிட - அவன் கையை இறுக்கமாய் பற்றியிருந்த ரோகிணி சிரித்தாள்.

"வந்துட்டோம். மலையுச்சிக்கு வந்துட்டோம்."

"மணி என்ன...?"

"சரியா ஒரு மணி. ஏன் பசிக்குதா...?"

"பின்னே...? காலையில எட்டு மணிக்கு ஹோட்டல்ல டிபன் சாப்பிட்டது... இன்னுமா வயத்துல உக்கார்ந்திட்டிருக்கும்..."

"பார்த்து வாங்க... இங்கே ஒரு பள்ளம்... கொஞ்சம் பெரிசா ஸ்டெப் எடுத்து வையுங்க... ஆ... அப்படித்தான்..."

"இந்த பகல் நேரத்திலேயே காத்து ஐஸ் கட்டியாட்டம் இருக்கே. ராத்திரியில எப்படியிருக்கும்...?"

"அதான் இந்த பொன்னூத்து ஹில்ஸோட மகிமை... குளிரும் ஆனா போத்திக்கத் தோணாது..."

"எங்க கம்பெனி டைரக்டர் ஷிண்டே இந்த பொன்னூத்து ஹில்ஸைப் பத்தி அடிக்கடி சொல்லிகிட்டே இருப்பார்.."

"உச்சிக்கு வந்துட்டோம். இப்படி உட்கார்றீங்களா...?" ராஜசேகரனை ஒரு பாறையின் மேல்

உட்கார வைத்தாள் ரோகிணி. ராஜசேகரன் தட்டுத் தடுமாறிக் கொண்டு உட்கார்ந்தான்.

"மொதல்ல டிபன் காரியரை பிரி... பசி வயித்துக்குள்ளே கபடி ஆடுது..."

"ரொம்பப் பசிக்குதா...?" அவன் வயிற்றை தன் மெல்லிய விரல்களால் தடவிக்கொண்டே கேட்டாள் ரோகிணி.

"ரொம்ப... ரொம்ப..."

கையோடு கொண்டு போயிருந்த டிபன் கேரியரைப் பிரித்தாள். ராஜ சேகரன் சப்புக் கொட்டினான். "ஆஹ்ஹா! புளியோதரை வாசனை ஆளைத் தூக்குதே..."

ஒரு தட்டில் புளியோதரையைப் போட்டு - அவன் கையில் கொடுத்தாள் ரோகிணி.

"சாப்பிடுங்க..."

"நீ...?"

"இதோ நானும் சாப்பிடறேன்..."

இரண்டு பேரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். இரண்டு வாய் சாப்பிட்ட பின் ராஜசேகரன் கேட்டான்.

"நாம இப்ப உக்கார்ந்திருக்க இடம்... எப்படியிருக்குன்னு கொஞ்சம் சொல்லேன் ரோகிணி."

"அருமையான இடம். நாலா பக்கமும் ஸ்லோமோஷன்ல நகர்கிற மேகங்கள். கண்ணுக் கெட்டின தூரம் வரைக்கும் பச்சை பசேல். ஆள் நடமாட்டம் அறவே இல்லை... மலைப்பாதையில் ஒரு கார் நிதானமா ஏறிட்டிருக்கு..."

"விக்... விக்..."



புளியோதரையின் காரம் மூச்சுக் குழலில் இறங்கிக் கொள்ள விக்கினான் ராஜசேகரன். ரோகிணி அவசர அவசரமாய் - பக்கத்திலிருந்த வாட்டர் கேனைத் திறந்து - அதை அப்படியே அவனிடம் கொடுத்தாள்.

"ம்... குடிங்க..."

வாங்கினான்.

தடுமாற்றமான பதட்டத்தில் - நழுவ - வாட்டர் கேன் தலை குப்புற விழுந்து உருண்டது.

"அடேடே...!" ரோகிணி எழுந்து ஓடிப்போய் வாட்டர் கேனை பிடிப்பதற்குள் - அத்தனை நீரும் தரையில் பாய்ந்திருந்தது.

"எ... என்னாச்சு ரோகிணி...?"

"தண்ணி முழுக்க கொட்டிடுச்சு..."

"ஸாரி ரோகிணி... ஃபால்ட் ஈஸ் மைன்..."

"பரவாயில்லீங்க... நான் போய் தண்ணி பிடிச்சுட்டு வர்றேன்..."

"தண்ணியா எங்கே கிடைக்கும்...?"

"வர்ற வழியில சுனை ஒண்ணைப் பாத்தேன். பத்து நிமிஷத்துல போய்ட்டு வந்துடலாம்... நீங்க சாப்பிட்டிருங்க... நான் போய் கொண்டாந்துடறேன்..."

"ரோ... ரோகிணி நீ மட்டும் தனியா... எப்படி...?"

"என்னங்க பயம்...? நீங்க மட்டும்... இருக்கிற இடத்தை விட்டு அசையாமே... அப்படியே உட்கார்ந்திருங்க..."

சொன்ன ரோகிணி - வாட்டர் கேனை எடுத்துக் கொண்டு சேலையை சற்றே உயர்த்தி பிடித்துக் கொண்டு - பாறைத் திட்டுகளின் மீது தாவி

இறங்கினாள்.

"ரோகிணி பார்த்து..."

"கவலைப்படாதீங்க..."

குரல் மேலே கீழே இறங்கினாள்.

ஐந்து நிமிஷ நடையில்-

அந்த பெரிய மரங்களுக்கு மத்தியில் - ரகசியம் பேசுகிற மாதிரி சுனை ஒன்று நீரை கொட்டிக் கொண்டிருக்க - அருகில் போனாள். ஜில்லென்ற தண்ணீரை வாட்டர் கேனில் நிரப்பிக் கொண்டு - திரும்பினாள்.

அந்த மூன்று பேரும் நின்றிருந்தார்கள்.

கொஞ்சம் தள்ளித் தெரிந்த மலைப் பாதையின் வளைவில் பாறைக்குப் பக்கத்தில் - அந்த சாக்லேட் நிற அம்பாசிடர் கார் தெரிந்தது.

## 19

தொட்டக்கோம்பையில் இருக்கும் கெஸ்ட் ஹவுஸுக்கு முன்னால் ஜீப் நின்றதும் அவிநாஷும், நவநீதகிருஷ்ணனும் இறங்கி - அவர்களைத் தொடர்ந்து நாகராஜன் இறங்கினார்.

"கெஸ்ட் ஹவுஸுக்கு வாட்ச் மேன் கிடையாதா...?"

"கிடையாது ஸார்..."

"சரி... வீட்டைத் திறங்க..."

நாகராஜன் வீட்டுப் படிகளில் ஏறி- கதவில் தொங்கிக் கொண்டிருந்த நவ்தால் பூட்டுக்கு விடை கொடுத்து கதவைத் தள்ளினார்.

அது சற்று சத்தமாய் உள்ளே போயிற்று.



மூன்று பேரும் உள்ளே போனார்கள்.

சின்ன ஹால்.

அதையொட்டி இரண்டு அறைகள். நாகராஜன் ஜன்னல்களைத் திறந்து கொண்டிருக்க - அவிநாஷும், நவநீதகிருஷ்ணனும் ஒவ்வொரு அறையாய் போய் எட்டிப் பார்த்தார்கள்.

கட்டில் கசங்கியிருக்க -

சவரோரமாய் - காலாவதியான ஸ்காட்ச் பாட்டில்கள்.

அவிநாஷ் புன்னகைத்தார்.

"பசங்க வந்து விளையாடிட்டு போயிருக்காங்க..."

"நாகராஜன்!"

"ஸார்..."

"இந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் பக்கத்துல யார் வீடு இருக்கு?"

"ஒரு ஆங்கிலோ இந்தியன் இருந்தார்... இப்ப இல்லை...?"

"இந்த ஊர்ல யார்கிட்டே விசாரிச்சா வல்லபைப் பத்தின விவரங்கள் கிடைக்கும்...?"

"எனக்குத் தெரியலை ஸார்..."

"உங்களுக்கு எதுதான் தெரியுது..." என்று எரிச்சலாய் சொன்ன நவநீதகிருஷ்ணன் திரும்பினார்.

"அவிநாஷ்!"

"ஸார்..."

"வீட்டைத் தரோவா செக் பண்ணுங்க..."

# 20

அந்த மூன்று பேர்களையும் பார்த்து லேசாய் திடுக்கிட்டாள் ரோகிணி. யார் இவர்கள்? என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே - ஒருவன் முன்னால் வந்தான். கண்கள் சிவந்து போய் மூச்சுக் காற்றில் விஸ்கி நாறியது.

"ஏ... ஏய்... உன் பேரென்ன...?"

ரோகிணி விலகி நடக்க - இன்னொருவன் திடும்மென்று அவள் மேல் பாய்ந்து தோள்களை இறுகப் பற்றினான்.

"ச்சீ... விடு..."

திமிற முயன்று முடியாமல் - அவனுடைய பிடிக்குள் கசங்கினாள். மூன்றாம் பேர்வழி அவளுடைய இடுப்பில் கைவைத்து கறுப்பாயிருந் தாலும் அம்சமா இருக்கே...

"திவா! கழுத்துல தாலி..."

"இருக்கட்டும்... பாவம் பண்ணும் போதும் கழட்டி வெச்சுடலாம்... உடம்பைப் பார் திம்சுக் கட்டை மாதிரி..."

ரோகிணி அவர்களை உதைக்க முயன்று - கடிக்க முயன்று முடியாமல் சோர்ந்து போக - சுலபமாய் கார்க்கு கொண்டு போகப்பட்டாள்.

"ச்சீ...! விடுடா..."

"விட்டுடறோம்... ரெண்டு மணி நேரம் கழிச்சு." கார்க்குள் அவளைத் திணித்தார்கள்.

ரோகிணி ஆவேசமாய் காலை ஊன்றி உந்தி னாள். ஒருவன் அணிந்திருந்த குளிர்கண்ணாடி - முகத்திலிருந்து கீழே விழுந்து நொறுங்கியது. சில



விநாடி நேரம் நிலவிய குழப்பத்தில் - அவர்களை பிய்த்துக் கொண்டு - ஓடினாள் ரோகிணி.

"டேய் திவா! அவ ஓடறா..."

"அவளாலே எங்கே ஓட முடியும்...?"

மூன்றுபேரும் துரத்தினார்கள்.

ரோகிணி குத்துச் செடிகளைத் தாண்டிக் கொண்டு சரிவை நோக்கி ஓடினாள். இருதயம் பயத்தில் இரைத்தது.

"இந்த மூர்க்கர்களிடமிருந்து தப்பிக்க முடியுமா...?"

நிச்சயமாய் சாத்தியமில்லை.

"என்ன பண்ணலாம்...?"

"அவரை கூப்பிடலாமா...? கூப்பிட்டாலும் கேட்குமா...? அப்படியே கேட்டாலும் அவரால் என்ன செய்ய முடியும்? அதிர்ச்சியில் தட்டுத் தடுமாறிக் கொண்டு - கீழே இறங்கி முயற்சித்து-

"ஓடிக் கொண்டிருந்தவள் சட்டென்று நின்றாள்."

சரிவு முடிந்து போய் -

கீழே அதளபாதாளம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. செங்குத்தான பாறையொன்று ஹோ வென்று கீழே போயிற்று.

"ஏன் நின்னுட்டே.... ஓடு..."

மூன்று பேரில் ஒருவன் சிரிக்க - இரண்டு பேர் அவளை நோக்கி நடந்தார்கள். ரோகிணி அவர்களை திக்கென்று வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ம்... ஓடு..."

நெருங்கினார்கள்.

"ப... பக்கத்துல வராதீங்க..."

மூச்சிறைத்துக் கொண்டே ஓரடி பின்வாங்கினாள்... ரோகிணி.

"ஏ... எய் நகராத... விழுந்த" ஒரு எலும்பு கூட கிடைக்காது..." மூன்று பேரும் அவளைச் சூழ்ந்தார்கள்.

"வ... வராதீங்க. கீழே குதிச்சுடுவேன்..."

"என்னது குதிச்சுடுவியா...? எங்க குதி பார்க்கலாம்.."

சிரித்தார்கள்.

ரோகிணி இன்னொரு அடி பின்வாங்கினாள்.

"டேய்! அவ குதிச்சுடுவா போலிருக்கு... வேண்டாம் போயிடலாம்."

"மதி! உனக்கு என்னிக்குமே பயம் தான்... அவ நம்மை பயமுறுத்தறா... எட்டிப் பிடி... பாறை மறைவுக்குக் கொண்டு போய்..."

ஒருவன் அவளை நோக்கிப் பாய்ந்தான்.

ரோகிணி சற்றும் தாமதிக்காமல் குதித்தாள். விநாடிக்கும் குறைவான நேரத்தில் காணாமல் போனாள்.

## 21

எஸ்.பி.க்கு எதிரி அட்டென்ஷனில் நின்றிருந்தார்கள் நவநீதகிருஷ்ணனும் அவிநாஷும். எஸ்.பி. கேஸ் ஃபைல்லை புரட்டி பார்த்துவிட்டு அசுவாரசியமாய் நகர்த்தி வைத்தார்.

"வல்லப்போட ஃப்ரண்ட் மதிவாணன் திருப்புறம்பியத்துக்கே போகலைங்கிறது கன்ஃபார்ம் இல்லையா...?"

"ஆமா ஸார்..."

"வேற எங்க அவன் போயிருக்கலாங்கிறதை என்கொயர் பண்ணிங்களா...?"

"பண்ணிகிட்டிருக்கோம் ஸார்..."

"அதே மாதிரி திருச்சிக்கு போன திருவாகரும் பதினைஞ்சு நாளைக்கு மேலாகியும் வீடு திரும்பலை...?"

"ஆமா ஸார்..."

"இவங்க ரெண்டு பேரோட தலைமறைவைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?"

"வல்லப் காலை செய்யப்பட்ட விவகாரத்தில் அவங்களும் இன்வால்வ் ஆகியிருப்பாங்கன்னு ஒரு சந்தேகம் கிளம்பியிருக்கு ஸார்..."

"வல்லபோட அம்பாசிடர் கார்ல கண்டெடுத்த கண்ணாடிச் சில் திவாகரோட கூலிங்கிளாஸோடது தானா...?"

"ஆமா... ஸார்..."

"கூலிங்கிளாஸ் எப்படி உடைஞ்சதுன்னு திவாகரோட ஒய்ஃப் கிட்டே கேட்டீங்களா...?"

"கேட்டோம் ஸார்... அந்தப் பெண்ணுக்கு அதைப்பத்தி ஒண்ணும் தெரியலை..."

"தொட்டக்கோம்பை கெஸ்ட் ஹவுஸில் ஏதாவது தடயம் கிடைச்சதா...?"

"கிடைக்கலை ஸார்..."

"இதுவரைக்கும் இந்த கேஸ்ல கிடைச்ச முக்கியமான ரெண்டு தடயம். வல்லபோட கண்டேஸா காரில் கிடைச்ச பேண்ட் எய்ட்.

அம்பாஸிடர் காரில் கிடைச்ச கூலிங்கிளாஸ் கிட இல்லையா...?"

"எஸ்... ஸார்..."

"ஃபர்தரா இந்த கேஸில் என்ன ஸ்டெப்ஸ் எடுக்கப் போகிறீர்கள்...?"

"மதிவாணனையும், திவாகரையும் கண்டு பிடிக்கணும் ஸார்..."

"சீக்கிரமா எதையாவது பண்ணி கேஸிக்கு லைஃப் குடுங்க... கமிஷனர் என்னை குதறிகிட்டிருக்கார்..."

எஸ்.பி. சொல்லிக் கொண்டிருக்கும் போதே - மேஜை மேலிருந்த டெலிபோன் இடைமறித்தது. ரிஸீவரை எடுத்தவர் எஸ் என்றார்.

"......"

"ம்..... சொல்லுங்க நான் எஸ்.பி.தான் பேசறேன்."

"......"

"ஃபிங்கர் பிரிண்ட்ஸ் பீரோவா...? என்ன விஷயம்...?"

"......" மறுமுனையில் குரல் பேசிக் கொண்டே போக எஸ்.பி.யின் முகம் வெகுவாய் மாறி - உதடுகள் "ஈஸிட்" என்ற அதிர்ந்தது.

## 22

மலைச்சரிவில் நிசப்தம்.

மூன்று பேரும் திக் பிரமை பிடித்து - ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னடா... இப்படி பண்ணிட்டா...?"



"லவ்வப் நான் வேண்டாம்ன்னு சொன்னேன்... நீ கேக்கலை..."

"இங்க நின்னு பேசிட்டிருக்க வேண்டாம்... மொதல்ல கார்க்கு போவோம்... கற்பு மேலே பொம்பளைகளுக்கு இன்னமும் ஸ்ட்ராங்கான அபிப்பிராயம் இருக்கு போலிருக்கு. அதான் குதிச்சட்டா..."

"அவளை கார்க்கு கொண்டு வந்தப்பவே... கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருந்தா... அவளாலே தப்பிச்சிருக்க முடியாது..."

"இந்த... மதி இருக்கானே அத பயந்தாங்கொள்ளி அவ ஒரு உதை விட்டதுமே இவன் வெலவெலத்துப் போய் பிடியை விட்டுட்டான்."

"என்ன ஒரு துணிச்சல் இருந்தா குதிப்பா."

கார்க்குள் ஏறி உட்கார்ந்தார்கள்.

"யாரும் பார்த்துடலையே...?"

"எந்த திக்கிலும் ஒரு ஈ காக்கா கிடையாது... சீக்கிரம் காரை கிளப்பு. கெஸ்ட் ஹவுஸுக்குப் போய் - மறுபடியும் குவார்ட்டர் விஸ்கியை வயிற்றுக்குள்ளே தள்ளினாத்தான் இந்த பதட்டம் குறையும்..."

கார் பீறிட்டு வேகம் எடுத்தது.

## 23

எஸ்.பி. டெலிபோனில் பேசிவிட்டு - ரிஸீவரை கவிழ்த்த பின் - நவநீதகிருஷ்ணனை ஏறிட்டார். ஃபிங்கர் பிரிண்ட்ஸ் பீரோவிலிருந்து ஒரு தகவல்...

"ஸார்..."

"வல்லபோட காரில் கிடைச்ச பேண்ட் எயிட் ஒரு ஆச்சர்யமான தகவலை சொல்லியிருக்கு. மூணு மாசத்துக்கு முன்னாடி ஆந்திரா போலீஸ் ஹெட் குவார்ட்டர்ஸிலிருந்து ஒரு தூக்குத் தண்டனை கைதி தப்பியது சம்பந்தமான ஒரு ஃபைலை ரிஸீவ் பண்ணினோம் ஞாபகமிருக்கா?"

"இருக்கு ஸார். அந்த கைதியோட பேர்கூட சந்துருலு. ஒரு மெடிகல் காலேஜ் ஸ்டேண்ட்..."

"கரெக்ட்! அந்த சந்துருலுவின் இடது கை கட்டை விரல் ஃபிங்கர் பிரிண்ட்ஸ்... பேண்ட் எய்டில் இருந்த ஃபிங்கர் பிரிண்ட்ஸோடு ஒத்துப் போகுதாம்..."

"ஸார்..."

"ம்... சொல்லுங்க..."

"தூக்குத் தண்டனை கைதி சந்துருலுக்கும் வல்லப்புக்கும் என்ன விரோதம் இருக்க முடியும் ஸார்...?"

"ஹூ... ஹேவ் இன்வெஸ்டிகேட்..."

"வல்லப்புக்கும் சந்துருலுவுக்கும் தொடர்பு இருந்திருக்க கூடிய பட்சத்தில் - மதிவாணனுக்கும் திவாகருக்கும் அதைப்பத்தி தெரிஞ்சிருக்கணும் ஸார்..."

"மே... பி! இப்போ கேஸ் லேசா பிடிபட ஆரம்பிச்சிருக்கு. வல்லபோட மரணத்துக்கு சந்துருலுதான் காரணம்ன்னா... கொலைக்கான மோட்டிவ் என்னவாக இருந்திருக்கும். லெட் அஸ் மைண்ட் இட்..."

""சந்துருலு தூக்குத் தண்டனை அடைஞ்சதுக்கு என்ன காரணம் ஸார்?



"காலேஜ் யூனியன் லீடர்ஸ் ரெண்டு பேரை ...ட்டிட்டு கொலை பண்ணியிருக்கான். ...செஷன்ஸ், ஐகோர்ட், சுப்ரீம் கோர்ட், ...ரெஸிடெண்ட், மெர்ஸி பெட்டிஷன் எல்லாமே ...வனை கைவிட்டுச்சு... தூக்கு தண்டனையை நிறைவேத்த ஒரு வாரம் இருக்கும் போது - ...ப்படியோ ஜெயிலிலிருந்து தப்பிச்சுட்டான்... இந்தியாவில் இருக்கிற எல்லா போலீஸ் ஹெட்குவாட்டர்ஸுக்கும் சந்துருலுவைப் பத்தி ...கார்ட்ஸ் போயிருக்கு.."

"சந்துருலுவுக்கும் - வல்லப்புக்கும் இடையில் இருக்கிற தொடர்பு... வல்லபோட பி.ஏ. ...கராஜனுக்கு தெரிஞ்சிருக்கலாம் ஸார்..."

"என்கொயர் த பர்ஸன்..."

# 24

ராஜசேகரன் தடுமாறிக் கொண்ட கலக்கமாய் ...ழுந்தான்.

தண்ணீர் கொண்டு வர போனவளை எங்கே ...ன்னமும் காணோம்?

வயிற்றை எக்கிக் குரல் கொடுத்தாள்.

"ரோ...கி...ணி...ஈ...ஈ...ஈ..."

நிசப்தம்.

"ரோ... கி... ணி... ஈ.. ஈ... ஈ... ஈ..."

பதிலுக்கு காற்று வேகமாய் அடித்தது.

"எங்கே போனாள்...? பத்து நிமிஷ நேரத்தில் வந்து விடுகிறேன் என்று போனவளை இவ்வளவு நேரமாகியும் காணவில்லையே...?"

வயிற்றக்குள் பயம் கடல் தசைகளை இறுக்கிப் பிடித்தது. அந்தக் குளிரிலும் முகம் தெப்பலாய் வியர்த்தது.

எந்த திசையில் போனாள்.?

வலது காலை மெல்லநீட்டி - ஒரு அடி எடுத்து வைத்தாள். கால் பட்டு பாத்திரம் உருண்டது.

தடுமாறி மேலும் ஒரு அடி எடுத்து வைத்தவனை - அந்தச் சிறிய பாறைத்திட்டு சுலபமாய் அவனை இடறி விட்டது.

மோசமான கோணத்தில் உருண்டான்.

தட்... தட்...

தலையும் உடம்பின் முக்கிய இடங்களும் செமத்தியான ரத்தக் காயங்களை வாங்கி கொள்ள - ராஜசேகரன் உருண்டு சரிவை நோக்கி வேகமாய் போய் - குற்றுச் செடிகளை பற்ற கொள்ள முயன்று முடியாமல் - ரோகிணியை விழு கிய அதே அதளபாதாளத்துக்குள் விழுந்தான்.

## 25

"என்ன அவிநாஷ்... விசாரிச்சீங்களா...?"

பைக்கை நிறுத்திவிட்டு - வியர்வை முகமா ஸ்டேஷனுக்குள் வந்த அவிநாஷை ஏறிட்டப கேட்டார் நவநீதகிருஷ்ணன்.

"நாகராஜனை என் கொயர் பண்ணினே ஸார்... சந்துருலுவைப் பத்தி தனக்கு எது தெரியாதுன்னு சொல்லிட்டார்."

"அந்த மனுஷன்தான் எதுக்குமே பிடி குடுக் மாட்டாரே... சரி திவாகரோட ஒய்ப் என் சொன்னா...?"



"அவளும் அதே பதில் தான்..."

நவநீதகிருஷ்ணன் தோள்களை குலுக்கி = பெருமூச்சு விட்டார். கேஸ்ல எந்த உஷ்ணமாய் க்ளீயராவே இல்லை... மர்டரர் பாயிண்ட்டும் வந்திருக்கான். வல்லப் அந்தோணிங்கிற பேர்ல அந்த அம்பாஸிடர் காரை ஏன் ஷெட்டுக்குள்ளே பூட்டி வைக்கணும். கார்க்குள்ளே திவாகரின் உடைஞ்ச கூலிங்கிளாஸ் சில். வல்லப் கொலையான கார்க்குள்ளே தூக்குத் தண்டனை கைதி சந்துருவின் ஃபிங்கர் பிரிண்ட்ஸோடு ஒரு பேண்ட் எய்ட். திருப்புறம்பியம் போறதா சொல்லிட்டு போன மதிவாணன் அங்கே போகலை. திருச்சிக்கு போய்ட்டு பத்து நாள்ல திரும்பிடப் போறதா சொன்ன திவாகரையும் காணோம்... நடந்திருக்கிற சம்பந்தமும் இல்லை... கேஸை எப்படி நகர்த்தறதுன்னே தெரியலை... எஸ்.பி.கிட்டே ரிப்போர்ட் குடுக்கப் போனா... மனுஷன் கெட்ட வார்த்தையில் திட்டறார்... கடைசி வரைக்கும் இன்ஸ்பெக்டராவே இருந்துடறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களான்னு கேக்றார்...

"கேஸை பேசாமே... ஸ்பெஷல் க்ரைம் பிராஞ்சுக்கு மாத்தி விட்டுடலாம் ஸார்..."

டெலிபோன் அலறியது.

நவநீதகிருஷ்ணன் ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணன்?" ஒரு ஆண்குரல் கேட்டது.

"எஸ்..."

"வல்லப் கொலையானது தொடர்பான... இன்வெஸ்டிகேஷனை நீங்க தானே பார்த்திட்டிருக்கீங்க...?"

"ஆமா... நீங்க யாரு...?"

"உங்களுக்கு சில உபயோகமான தகவல்களைச் சொல்லப் போகிறவன்... மதிவாணன், திவாகர் எங்கே இருக்காங்கன்னு எனக்குத் தெரியும்."

"எங்கே...?"

"தரமணி போற ரோட்ல... எட்டாவது கிலோ மீட்டர் கல்லுக்கு கொஞ்சம் தள்ளி - ஒரு பெரிய புளியமரத்துக்கு கீழே நாலடி ஆழ - ஆறடி நீள குழியில் பத்திரமா இருக்காங்க... மார்ச்சுவரிக்கு கொண்டு போக முடியாது.. ஜி.ஹெச். டாக்டர்களை கூட்டிகிட்டு... ஸ்பாட் போஸ்ட் மார்ட்டத்துக்கு போயிடுங்க..."

"ஹ... ஹ... ஹலோ... நீ.. நீ... யாரு...?"

ரிஸீவர் மறுமுனையில் கவிழ்க்கப்பட்டு - கொ என்று குறட்டை விட்டது.

## 26

ராஜசேகரன் - ரோகிணி மரணங்கள் பொன்னூத்து ஹில்ஸ் போலீஸாரால் புலனாய்வு செய்யப்பட்டு - கீழ்க்கண்ட ப பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்டன.

**புதுமண தம்பதிகள் மலையிலிருந்து குதித்து தற்கொலை**

இதுபற்றி கூறப்படுவதாவது: சென்னையைச் சேர்ந்தவர் ராஜசேகரன் (வயது 28) ஒரு விபத்தில் கண்பார்வை இழந்தவர். இவருடைய மனைவி ரோகிணி (23) இருவர்க்கும் சென்ற பதினான்காம் தேதி திருமணம் நடந்தது. பார்வையில்லாத ராஜசேகரனை கல்யாணம் பண்ணிக் கொண்டது... அவருடைய பெற்றோர்க்கு பிடிக்கவில்லை. அதனால் ரோகிணி தன் வீட்டாரோடு கோபித்துக் கொண்டு - கணவரோடு பொன்னூத்து ஹில்ஸுக்கு வந்தாள்.

**வாழ்க்கையில் வெறுப்பு**

பெற்றோர்களின் ஆதரவு இல்லாததால் - மனம் உடைந்த ரோகிணி கணவனோடு கலந்து பேசி - வாழ்க்கையை முடித்துக் கொள்ள விரும்பினாள். ராஜசேகரனும் இதற்கு உடன்பட்டார். சம்பவ தினத்தன்று இருவரும் - மலையுச்சிக்கு சென்று சந்தோஷமாய் இருந்துவிட்டு - சறுக்குப் பாறையின் உச்சியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டனர்.

**விசாரணை**

மலையடிவாரத்தில் சிதைந்த உடல்களை கைப்பற்றி பிணப்பரிசோதனைக்கு அனுப்பிய இன்ஸ்பெக்டர் அஞ்சய்யா - இது சம்பந்தமாய் மேலும் விசாரணை செய்து வருகிறார்.

**தாய் கதறல்**

தகவல் அறிந்துவிபத்து நேர்ந்த இடத்திற்கு வந்த ரோகிணியின் தாய் ராஜமும், தந்தை ராகவனும் மகள் - மருமகன் பிணங்களைப் பார்த்து கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது. இந்த சம்பவம் பொன்னூத்து ஹில்ஸ் ஏரியாவில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

# 27

திரமணி போகும் வழியில் எட்டாவது கிலோ மீட்டர் கல் கொஞ்சம் தள்ளி அந்தப் பெரிய புளியமரம் தெரிந்ததும் - போலீஸ் வேனும், ஜீப்பும் நின்றது. எஸ்.பி.டி.எஸ்.பி. இறங்கி முன்னால் நடக்க - நவநீதகிருஷ்ணனும், அவிநாஷும் பின் தொடர்ந்தார்கள். இரண்டு கான்ஸ்டபிள்கள். கடப்பாறை மண்வெட்டியோடு நான்கைந்து கூலியாட்கள். ஒரு டாக்டர், இரண்டு ஃபாரன்ஸிக் ஆட்கள் - வேனிலிருந்து இறங்கி தொடர்ந்தார்கள்.

எஸ்.பி. புளியமரத்துக்கு கீழே வந்து நின்றார், பூட்ஸ் காலால் தரையைத் தட்டினார்.

"மண்... நெகிழ்ந்த மாதிரிதான் இருக்கு..."

"டிக்கிங் வொர்க்கை ஆரம்பிச்சடலாமா ஸார்.."

"ம்..."

கூலியாட்கள் முன்னால் வந்தாக்ரள். மண் நெகிழ்ந்திருந்த பரப்பை அடையாளம் வைத்துக் கொண்டு - அரை வட்டமாய் நின்று - கொத்த ஆரம்பித்தார்கள்.

ஒரு ஐந்து நிமிஷம் கொத்தியதுமே - காற்றில் அந்த வீச்சம் அடிக்க - அதிகாரிகள் பின்னுக்குத் தள்ளி நின்று - கர்ச்சீப்பால் வாயையும் மூக்கையும் சேர்த்துக் கட்டிக் கொண்டார்கள்.

மேலும் ஒரு பத்து நிமிஷம் கடப்பாறைகள் செயல்பட நான்கடி ஆழத்தில் - அந்த உடல்கள் மண்ணோடு மண்ணாய் பிசையப்பட்டு



தெரிந்தன. காற்றில் வீச்சம் இப்போது அதிகமாய் இருந்தது.

உடம்புகளை பார்மலினில் நனைத்து - தரைக்கு மேல் கொண்டு வந்துகிடத்தினார்கள். சதைசிதைந்து போய் எலும்புகள் துருத்திக் கொண்டு தெரிந்தன.

டாக்டர் முகத்திற்கு ஓடர் கார்டை மாட்டிக் கொண்டு க்ளவுஸ் அணிந்த கைகால் - உடல்களை புரட்டிப் பார்த்து விட்டு சொன்னார்.

"ரெண்டு பாடியும் புதைக்கப்பட்டு பதினைந்து நாட்களுக்கு மேல் ஆயிருக்கணும். வயிற்றில் ஆயுத காயங்கள் தெரிகின்றன."

எஸ்.பி. திரும்பினார்.

"நவநீதகிருஷ்ணன்!"

"ஸார்..."

"இவங்க திவாகர், மதிவாணன் தானா...?"

நவநீதகிருஷ்ணன் கையிலிருந்த போட்டோக்களை காட்டிச் சொன்னார். "முகங்கள் சிதைஞ் ருக்கிறதுனால ஐடெண்டிஃபை பண்ண முடியலை ஸார்... ஆனா டெட் பாடீஸ் உடம்பில் இருக்கிற ட்ரஸ்ஸையும் - கையில் இருக்கிற மோதிரத்தையும் வெச்சு... வீகேன் ஐடெண்டிஃபை தெம்... திவாகரோட மனைவியையும், மதிவாணன் ரூமில் தங்கியிருக்கி அந்த ஃப்ரண்டையும் - ஸ்பாட்டுக்கு கூப்பிட்டு பாடீஸை காட்டினா... அவங்க பாத்து கன்ஃபர்ம் பண்ணிடுவாங்க..."

"ஒரு கான்ஸ்டபிளை அனுப்பி அவங்களை கூட்டிட்டு வரச் சொல்லுங்க... மீன் வொய்ல... ஸரவுண்டிங்க்ஸில் இருக்கிற... வீடுகள்ல ஒரு என்கொய்ரியை முடிங்க... எதாவது தகவ கிடைக்கலாம்...".

"எஸ்.. ஸார்..."

நவநீதகிருஷ்ணன் அவிநாஷை அழைத்துக் கொண்டு - கான்ஸ்டபிள்கள் இருந்த பக்கமாய் நகர்ந்தார்.

அதே விநாடி-

ரோட்டோரத்தில் அந்த ஆட்டோ படபடத்த படி வந்து நிற்க - ஒரு இளைஞன் இறங்கி புளியமரத்தை நோக்கி வந்தான். எஸ்.பி.யை நெருங்கி மெல்லிய குரலில் கேட்டான் எக்ஸ்க்யூஸ் மீ ஸார்... திவாகர், மதிவாண ரெண்டு பேரோட பிணங்களை ரெகவ பண்ணிட்டீங்களா...?

"யார் மேன் நீ...?"

"சந்துருலு..."

## 28

போலீஸ் யூனிபார்ம்கள் மொத்தமு பதட்டமாகி அவனைச் சூழ்ந்து கொள்ள - அவ புன்னகைத்தான். நான் உங்ககிட்டே சரணடையத்தான் வந்திருக்கேன்... எஸ்.பி... ஸார். தப்பிச்சுட்டு போற எண்ணம் எனக்கில்லை... நான் தரப்போகிற சத்தமானவாக்குமூலத்தை கேட்டுட்டு



என்னை கைது பண்ணி கூட்டிட்டு போகலாம்... நவ் அயாம் ஹார்ம் லெஸ்... என்கிட்டே எந்த விதமான ஆயுதமும் கிடையாது... உங்களுக்கு சந்தேகமாயிருந்தா... என்ன சோதிச்சும் பார்த்துக்கலாம்...

சொன்னவன் இரண்டு கைகளையும் உயரத் தூக்கிக் கொண்டு நின்றான். எஸ்.பி. கண்ணைக் காட்ட இரண்டு கான்ஸ்டபிள்கள் சந்துருலுவின் உடம்பைத் தடவினார்கள்.

"ஒண்ணும் இல்ல ஸார்."

சந்துருவிடம் திரும்பினார் எஸ்.பி.

"என்ன சொல்லப் போறே...?"

"அவன் மார்ப்புக்குக் குறுக்காய் கைகளைக் கட்டிக் கொண்டுபுன்னகைத்தபடி சொன்னான்.

"ஸார்! நான் தூக்கு கயித்துக்கு தப்பின தண்டனைக் கைதிதான். மறுக்கலை. ஆனா... எந்தக் குற்றமும் பண்ணாதவன். அரசியல் ஈடுபாடு எனக்கு அதிகம். ஒரு மெடிகல் காலேஜ் ஸ்டுடண்டுக்கு அரசியல் இருக்கக் கூடாது தான். ஆனா... நான் தீவிரமா அதுல ஈடுபட்டேன். அதுவும் எதிர்கட்சிக்கு ஆதரவா. ஆளுங்கட்சிக்கு பொறுக்குமா...? என்னைக் கொலைப் பழியில் மாட்டிவிட்டு - கோர்ட்டுக்கு கொண்டு போய் - தூக்கு கயித்தை பரிசா குடுத்தாங்க. என்னோட மேல் கோர்ட் ஆப்பீல்கள் எடுபடலை. தூக்குத் தண்டனை எனக்கு கன்ஃபார்ம் ஆச்சு. பிரஸி டெண்ட்டுக்கு போட்ட மெர்ஸி பெட்டிஷனும்

கையை விரிச்சுடுச்சு... தூக்குல போட எனக்கொரு நாளை ஃபிக்ஸ் பண்ணினாங்க...! செய்யாத குற்றத்துக்கா - தண்டனையை ஒத்துக்க நான் விரும்பலை. சமயம் பார்த்து ஜெயிலுக்குள்ளே வந்த தண்ணி லாரிக்கு கீழே ஒட்டிகிட்டு வெளியே வந்தேன். கடந்த மூணு மாச காலமா போலீஸுக்கு கண்ணாமூச்சி காட்டிட்டு - பொன்னூத்து ஹில்ஸ் பாரஸ்ட்ல ஒளிஞ்சிட்டிருந்தேன்... உள்ளேயிருந்த ஆதிவாசிகள் தான் எனக்கு சாப்பாடு குடுத்தாங்க... இந்த நிலைமையில் தான் போன ரெண்டு மாசத்துக்கு முன்னாடி - ஒரு பகல் நேரத்துல நடந்த சம்பவத்தைப் பார்த்தேன். நீங்க கூட பேப்பர்ல படிச்சிருக்கலாம். ரோகிணி - ராஜசேகரன்ங்கிற தம்பதிகள் மலையிலிருந்து விழுந்து தற்கொலை பண்ணிகிட்டதா ந்யூஸ் பார்த்திருக்கலாம். ஆனா... அது தற்கொலையில்லை... அந்தப் பெண்ணை கார்ல வந்த மூணு யூத்ஸ் கெடுக்கப் பார்த்தாங்க... அந்தப் பெண்ணை நான் காப்பாத்த நினைக்கிறதுக்குள்ளே - அவ குதிச்சுட்டா. அது மூணு பேரும் உடனே கார்ல தப்பிச்சுட்டுப் போயிட்டாங்க. நான் கார் நெம்பரை நோட் பண்ணிக்கிட்டு - மெட்ராஸ் வந்தேன். போலீஸுக்கு என்னால நேரடியா போக முடியாது. போலீஸுக்கு மொட்டைக் கடுதாசி மாதிரி எழுதி போட்டாலும் - அது அவ்வளவு எபக்டீவா ஒர்க். பண்ணாதுன்னு என் மனசுக்குப் பட்டது. ரெண்டு நாள் யோசிச்சேன். மூணாவது நாள் ஒரு முடிவுக்கு



வந்தேன். போலீஸ் கையில என்னிக்காவது ஒரு நாள் மாட்டிகிட்டு தூக்குல தொங்கறதைக் காட்டிலும் - மூணு கொலைகளை செஞ்சுட்டே... தூக்குல தொங்கிடலாம்ங்கிற முடிவுக்கு வந்தேன். என் ஜெயில் தோஸ்த் ஒருத்தனை சந்திச்சு கொஞ்சம் பணத்தை வாங்கிகிட்டு காரியத்துல இறங்கினேன். ஆர்.டி.ஓ. ஆபீஸ் ப்யூனுக்கு ஒரு பத்து ரூபாயை குடுத்து - கார் நெம்பர்க்குரிய அட்ரஸ் கேட்டேன் கிடைத்தது. வல்லபையும் - அவனோட ஃப்ரண்ட்ஸ் திவாகர், மதிவாணன் ரெண்டு பேரையும் திவாகரையும் திருப்புறம்பியத்துக்கு புறப்பட்ட மதிவாணனையும் வழியில மடக்கி ப்ளாக்மெயில் பண்ணி தரமணிக்கு கூட்டிட்டு வந்து காரியத்தை முடிச்சேன். வல்லபை தீர்த்துக் கட்ட அவனோட பிஸினஸ் வழியிலேயே போய் - அந்தோணின்னு சொல்லி ஹோட்டல் யாத்ராவுக்கு வரவழைச்சி காருக்குள்ளே கதையை முடிச்சேன்..."

பேச்சை நிறுத்திவிட்டு - மூச்சு வாங்கிய சந்துருலு சில விநாடிகளுக்குப் பின் தொடர்ந்தான்.

"இந்தக் கொலைகளை பண்ணின பின்னாடி எம் மனசுல ஒரு சபலம். அது வேறொண்ணுமில்லை. உயிர் வாழணும்ங்கிற சபலம்தான்... ஆனா அந்த சபலம் பத்துநாள் கூட நீடிக்கலை. செய்யாத குற்றத்துக்காக தூக்குத் தண்டனை கிடைச்சுது. இப்ப செஞ்ச குற்றத்திலிருந்து தப்பிக்கிறது சரியில்லைன்னு எம்மனசாட்சி

உறுத்தியது. அந்த உறுத்தல் தாங்காமதான்... இன்ஸ்பெக்டர்க்கு போன் பண்ணி - திவாகரும் மதிவாணனும் புதைக்கப்பட்டிருக்கிற இடத்தைச் சொன்னேன். நீங்க பாடியை ரெகவர் பண்ணி - குழம்பிட்டிருக்கும் போதே - சரணடையவும் வந்துட்டேன்... இப்ப நீங்க என்னை கைது பண்ணலாம் எஸ்.பி. ஸார்."

சந்துருலு தன் இரண்டு கைகளையும் நீட்ட - எஸ்.பி. அந்த புதுக்குற்றவாளியை திக் பிரமையோடு பார்த்தார்.

- முற்றும் -